95

A

ஸ்ரீ

ஸ்ரீ பாண்டுரங்காயநம:

# BHAKTHI SANGRAHAM MORAL

SERIES 3.

# பக்த மாலிகை.

A GUIDE

TO

TAMIL READING

*YOUNG (MEN AND WOMEN).*

TAMIL TRANSLATION FROM MARATTI.

PUBLISHED BY

**V. SRINIVASA ROW.**

Q22:417
M12
172456

MADRAS:

PRINTED AT THE COMMERCIAL PRESS, TRIPLICANE.

1912.

*Price per Series]* *[Annas 3.*

உ

ஸ்ரீ பாண்டுரங்காயநம:

பூவைகுண்டமாகிய பண்டரீபுரம் ஸ்ரீ பாண்டுரங்கனுடைய பக்த சரித்திரங்கள் 180-ம் சகலருக்கும் பிரயோஜனார்த்தமாக வாசிக்கபட்டவர்களுக்கு நல்லொழுக்கம், பக்தி உண்டாக்கத்தக்கதாக மாதம் ஓர் சஞ்சிகை கொடுத்தும், அனுப்பியும் வரப்படும்.

## அடியில் கண்டவாறு சரித்திரங்கள்.

151. நரசிம்ம சரஸ்வதி சரித்திரம்.
152. திரிபுரதாஸ் ,,
153 லாலன்கோஜி ,,
154. ஜஸவந்தார் ,,
155. ஜயராமுடு ,,
156. ராமச்சந்திரபட்டர் ,,
157. ராமகிருஷ்ணபட்டர் ,,
158. கிரிதரலால் ,,
159. குணவதி ,,
160. குவராபாயி ,,
161. நரவாகனர் ,,
162. நிரஞ்சனர் ,,
163. மதவனாதர் ,,
164. ரத்னாகரர் ,,
165. நாராயணபட்டர் ,,
166. ஷேக்பரீத் சரித்திரம்.
167. காஜிமகம்மது ,,
168. பலக்புகார் ,,
169. முத்கலபட்டர் ,,
170. விட்டலபுரந்தர் ,,
171. யாமாஜி ,,
172. லாடுபக்தர் ,,
173. திரிலோகுடு ,,
174. சஜணகசாயி ,,
175. ராயசிங்கஅங்கதர் ,,
176. நாராயணசுவாமி ,,
177. சூரத்மாதவதாஸ் ,,
178. ஹரிவியாசர் ,,
179. சாங்கலதேவ ,,
180. யாதவபந்துலு ,,

MADRAS 1912

வெளிப்பட்டு வருவதற்கில்லாமல் அவ்வளவு பந்தோபஸ்தாகக் கட்டியிருக்கிறேன்; நீயும், உன் தாய், தந்தை எவ்விதமாக வெளிப்பட்டு வரப்போகிறீர்கள் பார்ப்போம், கூலி கொடுத்தாலாச்சுது; இல்லாவிடில் உன் குலமுழுதும் பஸ்மமாகப் போகும்படி குடிசைக்கு நெருப்பிட்டு விடுகிறேன் என்று ஆர்ப்பரித்துக்கொண்டு அவ்விடமிருந்து புறப்பட்டு சற்றுதூரம் போய்மறைந்தார். அதைக்கேட்ட நாமதேவர் பயந்து நடுநடுங்கி குடிசையிலிருந்து வெளிப்படுவதற்குத் தன்னாலான மட்டும் பார்த்து முடியாமல் ஆ! ஆ! நம்மை மோசஞ்செய்து கொன்று போடவேண்டுமென்றே இவ்விதமாக வேலை செய்திருக்கிறான்; ஒரு வேளை நெருப்பு வைத்தால் என்ன செய்வதென்று பகவானைக் குறித்து உரக்க ஸ்தோத்திரஞ் செய்தார். அப்போது அயல் வீட்டுக்காரர்கள் ஓடிவந்து அடா நாமா எதற்காகப் பகவானைக் கூப்பிடுகிறாய், உனக்கு என்ன ஆபத்து நேரிட்டது என, நாமதேவர் யாரோ ஒருவன் மழையிலும் காற்றிலும் நாங்கள் படுகிற அவஸ்தையைக் கண்டு சகிக்கமாட்டாதவன் போல் பாசாங்கு செய்து ஐயோ! நாமா குடியிருக்க வீடில்லாமல் மழையிலும் காற்றிலும் அவஸ்தைப்படும்படியாகக் குடிசைக்குள்ளிருக்க நேரிட்டதோ, அடா நாமா நீ எனக்குப் பாலிய சிநேகிதனுச்சுதே, உனக்கு இப்பேர்ப்பட்ட கஷ்டமும் வரவேண்டுமா? அடா நாமா நீ படுகிற அவஸ்தையைக் கண்டு சகிக்காத நான் குடிசைக்கு வேண்டிய சாமான்கள் கொண்டுவந்திருக்கிறேன்; நீயும் சற்று ஒத்தாசையாயிருந்தால் இருவருஞ்சேர்ந்து குடிசையைக் காற்று மழைக்கு அசையாமல் பந்தோபஸ்து செய்வோம் என்றான். அப்போது நான் அவனைப் பார்க்கையில் பாலிய சிநேகிதனாகவே தோன்றிற்று; நாங்கள் இருவரும் குடிசை கட்ட ஆரம்பித்து நான் உள் பக்கமும், அவன் வெளிப்பக்கமுமிருந்து குடிசை கட்டி முடித்தோம். பிறகு அவன் என்னைப் பார்த்து அப்பா நாமா இராத்தூக்கமில்லாமல் வெகு சிரமப்பட்டு வேலை செய்தேனே, எனக்குச் சீக்கிரம் கூலி கொடுத்தனுப்பு என, அப்பா நீ ஆதியில் கூலியைப் பற்றி யாதொன்றும் பேசவில்லையே, உபகாரத்திற்குச் செய்த வேலையாச்சுதே, நான் கூலி கொடுக்கமாட்டேனென்று சொல்லக் கேட்ட அவன் கோபித்துக் கூலி கொடுத்தாலாச்சுது, இல்லாவிடில் குடிசையில் நெருப்பு வைப்பேன் என்று சொல்லுகிறான், நான் வெளியே வருவேனென்றால் வழியில்லை என்றார். அப்போது அயல் அண்டை வீட்டுக்காரர்கள் யாரடா அவன் நெருப்பிடுகிறவன், நீ ஒன்றுக்கும் பயப்படாதே, சூரியோதய பரியந்தம் நாங்கள் இவ்விடத்திலிருக்கிறோம் என்று சொல்லி

குடிசையின் ஓர் பக்கம் திறந்து விட்டார்கள். உடனே தன்னை வெளிப்படுத்திவிட்டால் போதுமென்று நினைத்துக்கொண்டிருந்த நாமதேவர் வெளிப்பட்டுச் சந்திரபாகாவில் ஸ்நானஞ்செய்து பண்டரீநாதருடைய கோவிலை நோக்கிச் சென்றார். சூரியோதயமான உடனே தாமோஜிசேட்டும் குணபாயும் குடிசையின் அழகை வெளியே வந்து பார்த்தபோது நாரு, மூங்கில் முதலான குடிசையைச் சேர்ந்த சகல சாமான்களும் பொன்மயமாயிருக்கக் கண்டு பிரமித்துச் சகலமும் பகவானுடைய மகிமை என்று உணர்ந்து அதில் ஒரு நாரைக் கடையில் விற்றுச் சகல பதார்த்தங்களும் வாங்கி வந்து சமைத்து பண்டரீநாதனுக்கு நைவேத்தியம் கொண்டுபோனார். நாமதேவர் நைவேத்தியத் தட்டைப் பார்த்து ஆ! ஆ! இன்றைக்கென்ன நைவேத்தியம் வெகு சம்பிரமமாயிருக்கின்றதே என்று அதிசயித்து பண்டரீநாதனுக்கு பூஜை முதலானவை செய்து அன்னம் ஊட்டினார். பகவான் சந்தோஷமாகப் புசித்து ஹே நாமா! நேற்றைத்தினம் இராத்திரி நித்திரையில்லாமல் வெகு கஷ்டப்பட்டுக் குடிசை கட்டி முடித்ததற்குக் கூலி கொண்டுவந்தாயா என, நாமதேவர், சுவாமி என்னை எஜமானனாக்கித் தேவரீர் கூலிக்காரனாய்க் கூலி கேட்கலாமா? தாஸனுக்கு தாஸனாக ரூபந்தரித்தீரோ ? உம்முடைய பெருமையை விட்டீரோ என்று பற்பல விதமாக ஸ்தோத்திரம் செய்கையில் பகவான், ஆனந்தித்து ஹே! நாமா, பிறந்த குழந்தைக்கு விஷ்ணுதாஸ் என்று பெயரிட்டு மிக அன்புடன் பாதுகாத்து வருவாயாகவென்று ஆக்ஞாபித்து அந்தர்த்தானமானார்.

பிறகு நாமதேவர் வீட்டுக்கு வந்து வீடெங்கும் பொன் மயமாயிருக்கிறதைக் கண்டு ஆனந்தமடைந்து குழந்தையை எடுத்து உச்சிமோந்து மார்போடணைத்து முத்தமிட்டுக் குலாவிப் பகவானுடைய ஆக்ஞையின்படி விஷ்ணுதாஸ் என்று பெயரிட்டுப் பிராமணர்களுக்கு அன்னதானம், சொர்னதானம், வஸ்திரதானம், பூமிதானம், கோதானம் முதலான தானங்களெல்லாஞ்செய்து வெகு சம்பிரமத்துடன் பந்து ஜனங்களை அழைத்து விருந்திட்டு அவரவர்களுக்குத் தகுந்தபடி மரியாதை செய்து அனுப்பினார். நாமதேவர் திரவியம் எல்லாம் செலவு செய்கிறதைத் தாய் தந்தை கண்டு கோபித்து அப்பா நாமா! ஒவ்வொரு தடவையும் பகவானால் கொடுக்கப்பட்ட திரவியம் ஆபத்துகாலத்தில் உதவுமென்று வைத்துக்கொள்ளாமல் எல்லாவற்றையும் சிலவு செய்துவிட்டால் பகவான் அடிக்கடி நமக்குத் திரவியம் கொடுத்துக் கொண்டிருப்பாரா என்ன ? இவ்விதமே பல வழியாக செலவழித்து

குடியிருக்க வீடில்லாமலும், நைவேத்தியத்திற்குச் சாமான்களில்லாமலும் கஷ்டப்பட்ட விஷயங்களெல்லாம் உனக்குத் தெரியாததல்லவே என்று பல விதமாகப் புத்தி சொன்னார்கள். நாமதேவர் தாய் தந்தையைப் பார்த்து ஹே பிதா, வனத்தில் இரண்டு நாள் உபவாசமாக வந்த பிராமணனுக்கு ஒரு வேடன் தினைமாவும், தேனும் கொடுக்க, பிராமணன் புசித்து திருப்தியடைந்ததினால் அவ்வேடன் பூலோகத்தில் ராஜ பதவியும், பரலோகத்தில் உத்தம பதவியும் அடைந்ததாக பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, பூமி சுபிக்ஷமாக யிருக்கையில் சொர்னதானமும், துர்பிக்ஷமாயிருக்கையில் அன்னதானமும் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது; ஆகையால் தானம் செய்தால் யாதொன்றும் குறைவுண்டாகமாட்டாது; கொடுக்கிற தாதா ஸ்ரீபண்டரீநாதன் இருக்க, நான் தானம் செய்கிறதற்கு என்ன தடையிருக்கிறதென்று எல்லாவற்றையும் செலவு செய்து வெறுங்கையனாய்ப்பண்டரீநாதனுடைய சன்னிதானத்திற்குச் சென்று ஆனந்தமாகப் பஜனை செய்துகொண்டிருந்தார்.

நாமதேவர் கோவிலுக்குப் போன பின்பு அவருடைய தாய் தந்தை தமது குழந்தை நாமன் பகவானால் கொடுக்கப்பெற்ற தங்கம் யாவையும்செலவழித்து வெறுங்கையோடு கோவிலுக்குப் போனதைக் கண்டு பரிதபித்து அடடா நாமனுக்குத் தெரியாமல் கொஞ்சம் பொன்னை ஒளித்துவைக்காமல் போனோமே என்று விசனமடைந்து ஜீவனத்திற்கு வேறு மார்க்கமில்லாமல் தையல் வேலை செய்து ஜீவனம் செய்து வந்தார்கள். நாமதேவருடைய மாமனாராகிய வாசுதேவ சாவுகார் தன் மகள் புத்திரனைப் பெற்றதையும், நாமதேவர் தனக்கு அகப்பட்ட திரவியத்தை ஒரு நாழிகைக்குள் பிராமணர்களுக்குக் கொடுத்து வறுமையடைந்ததையும் கேள்விப்பட்டு விசனமடைந்தவனாய் குணபாயி, தாமோஜிஸேட்டு உத்தரவின் மேல் மகளைத் தன் வீட்டுக்கழைத்துபோய்க் குழந்தைக்குக் காது குத்தவேண்டுமென்று நினைத்து நல்ல நாள் பார்த்து முகூர்த்தம் வைத்துச் சேவகனை அழைத்து நாளைத்தினம் குழந்தைக்குக் காதுகுத்துக் கலியாணமாதலால் நீங்கள் நாளை உதயத்துக்கு வந்து சேரவேண்டுமென்று குணபாயிடம் சொல்லிவரும்படி கட்டளையிட்டு அனுப்ப, அவனும் அவ்விதமாகவே சொல்லி வந்தான். அதைக்கேட்ட குணபாயி தாமோஜிஸேட்டு ஆ! ஆ! நாங்கள் தரித்திரதசையிலிருக்கும்போது தானா நமது சம்மந்திக்கு முகூர்த்தம் வைக்கச் சமயம் நேர்ந்தது, நாளை நாங்கள் போகவேண்டுமென்றால் தகுந்த மரியாதையுடன்

வரிசை கொண்டுபோக வேண்டுமே! இதற்கு என்ன செய்வோம், கையில் ஒரு காசு கூட இல்லையே, யாரைக்கேட்போம் என்று விசனப்பட்டுக் கொண்டிருக்கையில், பகவான் பண்டரீநாதன் சாவுகாரைப் போல் ரூபம் தரித்து தாமோஜிஸேட்டு இடத்தில் போய் நாளைத் தினம் உமது பேரனுக்குக் காதுகுத்துக் கலியாணமென்று கேள்விப் பட்டேன், நீர் அதற்கு வேண்டிய சாமான்கள் சேகரிக்காமல் ஏதோ விசனப்பட்டுக்கொண்டிருக்கிறீரே, கையில் திரவியமில்லை யென்று விசனமோ, அதற்காக யோசிக்கவேண்டாம், நான் எவ்வளவு திரவியமென்றாலும் கொடுக்கிறேன்; முன் ஒரு தடவை சாதுவேஷந் தரித்து வந்து நாமதேவரிடம் முப்பதினாயிரம் பொன் யாசகம் வாங்கிக்கொண்டு போனதின் மேல் லக்ஷாதிபதியானேன், உபகாரத் திற்குப் பிரதி உபகாரம் செய்யவேண்டியகடமையாதலால் உமக்குத் தேவையான திரவியம் கொடுக்கிறேனென்று சொல்லி சேவகனை அழைத்து இந்தக்ஷணம் நமது வீட்டுக்குச்சென்று இருபதினாயிரம் பொன் கொண்டுவந்து கொடு என்று சொல்லி மறைந்தார்.

பகவான் நாமதேவருடைய மனதைச் சோதிக்க எண்ணி அப்பா நாமா நாளைத்தினம் உன் மைந்தனுக்குக் காதுகுத்துக் கலியாண முகூர்த்தமாம், உன் தாய் தந்தை திரவியமில்லை என்று கவலையடைந் திருக்கிறார்களாதலால் நீ வீட்டுக்குப்போய் அவர்களுடைய கவலை யைத்தீர்த்து வாவென்று ஆக்ஞாபித்தார். உடனே அவர் வீட்டுக்கு வந்து தாய் தந்தையைப் பார்த்து ஏன் விசனப்படுகிறீர்கள், என்ன சங்கடம் நேரிட்டது என, தந்தை: அப்பா நாளைதினம் உன் மைந்தனுக்கு காதுகுத்துக் கலியாணமென்று ஒரு சேவகன் உன் மாமனார் வீட்டிலிருந்து சொல்லிப்போனான்; நாங்கள் நாளைதினம் வரிசை கொண்டுபோவதற்குத் திரவியமில்லாமலிருக்கிறோமேஎன்று சொல்லுகையில், சேவகர்கள் தாமோஜிஸேட்டு முன்பாகப் பொன் மூட்டையை அவிழ்த்து வைத்து இருபதினாயிரம் பொன் சரியாயிருக்கிறதா எண்ணிக்கொள்ளுமென்றார்கள். நாமதேவர்: சேவகர்களே இந்தத் திரவியம் யார் அனுப்பியது என, சேவகர்கள்: சுவாமி எங்கள் சாவுகார் முன் ஓர் காலத்தில் சாதுவேஷந்தரித்து தங்களிடத்தில் யாசகம் வாங்கிக்கொண்டு போய் லக்ஷாதிபதியானதால் உபகாரத்திற்கு உபகாரம் எங்கள் வசம் திரவியம் அனுப்பினார் என்றார்கள். அதைக் கேட்ட நாமதேவர் காதை மூடிக்கொண்டு ஹரி ஹரி, நாராயணா, தானம் கொடுத்ததை மறுபடி வாங்குவாருமுண்டோ? சேவகர்களே இந்தத் திரவியம் எனக்கு வேண்டாம், உங்கள் சாவுகாரிடத்

தில் கொண்டுபோய் கொடுத்துவிடுங்கள் என, தாமோஜிஸேட்டு புத்திரனை நோக்கி அப்பா: சாவுகார் மனப்பூர்வமாய்க் கொடுத்தனுப்பிய திரவியம் ஏன் வேண்டாமென்று சொல்லுகிறாய் என்றார். அதைக் கேட்ட நாமதேவர் பிதாவை வணங்கி தானம் கொடுத்ததை வாங்கினால் நரகத்துக்குள்ளாவோம் என்று பல வாக்கியங்களை எடுத்துச் சொல்லிப் பிதாவுடைய மனதைக் கரைத்துத் தான் பகவானைக் குறித்து கீர்த்தன பூர்வமாய் சுருதி லயத்தோடு ஆனந்தமாகப் பாட ஆரம்பித்தார். தாய் தந்தை இருவரும் நாமதேவர் பாடும் கீர்த்தனையைக் கேட்டுப் பிரமானந்தமடைந்து ஸ்மரணை தப்பி நித்திரை செய்தார்கள்.

பிறகு சேவகர்கள் பகவானுடைய சன்னிதியடைந்து நாமதேவரைக் குறித்துப் பலவாறாகப் புகழ்ந்து கொண்டாட, பகவான் அநேக பகவத் பக்தர்கள், ருஷி கூட்டங்கள் சூழ்ந்துவர, தேவ கன்னிகைகள் வரிசைகள் ஏந்த, ரம்பை, ஊர்வசி, மேனகை முதலானவர்கள், நடனமாட, நாரதர் கானஞ்செய்ய, தேவதுந்துபி முழங்க வைபோகத்துடன் நாமதேவர் வீடடைந்து நாமதேவரைக் கூப்பிட்டார். உடனே நாமதேவர் வெளியில் வந்து பார்த்துப் இவ்வித சம்பிரமத்துடன் வரிசை கொண்டுவந்திருக்கிறவர் பகவான் என்று நினைத்து ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தார். பகவான் அவரைச் சமீபம் அழைத்து அப்பா நான் உன் கண்ணுக்கு மாத்திரம் ஸ்வயரூபத்தையும், மற்றவர்களுக்கு சாவுகாராகவுமிருப்பேனுதலால் வெளியிடாமல் உன் மாமனார் வீட்டுக்கு சீக்கிரம் ஸ்நானம் செய்து ஆடை ஆபரணங்களணிந்து உன் தாய் தந்தையுடன் வாவென்று அழைத்து வாசுதேவ சாவுகார் வீடடைந்தார். சாவுகார் சம்மந்தி முதலானவர்களுக்கு மரியாதை செய்துக் குழந்தைக்கு மங்கள ஸ்நானஞ்செய்வித்து அலங்காரம் செய்து காதுகுத்திச் சகலமான பிராமணர்களுக்கும் சொர்ன தானம், பூமிதானம் முதலான தானங்கள் கொடுத்தனுப்பினர். பகவான் பந்து ஜனங்களுக்கு விருந்து செய்து தாம்பூலம் கொடுத்து உபசாரம் செய்து சாவுகாரைப் பார்த்து ஹே சாவுகார் நான் உமது மருமகனுடைய பாலிய சிநேகிதனாதலால் அவனுடைய குழந்தைக்குக் காதுகுத்துக் கலியாணமென்று கேள்விப்பட்டு ஏதோ என் சக்திக்குத் தக்க வரிசை கொண்டுவந்தேன், சந்தோஷமாச்சுது, இனி எனக்கு விடை கொடுத்தனுப்புமென, சாவுகார் பகவானுக்கு மரியாதை செய்ய, பகவான்: நாமதேவர், தாமோஜிஸேட்டு முதலானவர்களைநோக்கி இனி நீங்கள் சௌக்கியமாயிருங்கள் என்றுசொல்லி விடைபெற்றுச் சாவுகார் வீட்டைவிட்டு வெளியில் வந்துச் சற்று தூரம்

போய் அந்தர்த்தானமானார். பிறகு தாமோஜிஸேட்டு சகல பந்துக்களையும் தம்முடைய வீட்டுக்கு அழைத்து வந்து விருந்தளித்து உபசாரம்செய்து அனுப்பினார். நாமதேவர் ஸ்ரீபண்டரீநாதன் கோவிலைத் தன் சொந்த வீடாக நினைத்து இரவும் பகலும் ஆனந்தமாக நாள் கழித்து வந்தார்.

### தீர்த்த யாத்திரை.

ஒருநாள் ஞானதேவசுவாமி நாமதேவசுவாமியுடைய தரிசனத்திற்குப் போகவேண்டுமென்று அபேக்ஷித்து அவர் வீடு நோக்கிச் சென்றார். ஞானதேவர் வருகிறதை நாமதேவர் அறிந்து அவரை எதிர்கொண்டழைத்து வந்து அர்க்கியபாத்திய ஆசமனீயங்கள் கொடுத்துப் பாத பூஜைபண்ணிச் சுவாமி, தேவரீர் என் கிரகம் வர நான் பூர்வம் என்ன பூஜை செய்திருந்தேனோ, சுவாமிகளுடைய பாததூளிபட்ட மாத்திரத்தில் என் கிரகம் பரிசுத்தமாகியது, என் ஜன்மம் கிருதார்த்தமாயிற்று என்று ஆனந்தமடைந்து சுவாமி-தேவரீர் என் கிரகத்திற்கு வந்த காரியம் என்ன ? அநுக்கிரகம் செய்ய வேண்டும் என்றார். ஞானதேவர்: அப்பா நான் தீர்த்தயாத்திரைபோக அபேக்ஷைகொண்டிருக்கிறேன், உன்னைத் துணையாக அழைத்துப் போக வந்தேன் என, நாமதேவர் விசனத்தில் மூழ்கினவராய் சுவாமி நான் பிறந்து இதுகால பரியந்தம் பகவான் பண்டரீநாதனை ஒரு நிமிஷமேனும் விட்டுப் பிரிந்ததில்லையே, என் மாதா, பிதா, குரு, தெய்வம், சகலமும் அவரே, அவரை விட்டு நான் எவ்விதமிருப்பேன், ஒரு நிமிஷம் கூடப் பிரிந்திருக்கமாட்டேன் என்றார். அதற்கு ஞானேசுவரர் பண்டரீநாதருடைய தரிசனத்திற்குப்போய் அவரிடம் சங்கதி சொல்லி உத்தரவு கேட்டுப்போகலாம் வா என்று கையைப் பிடித்துப் பகவத் சன்னிதானத்திற்கு அழைத்துச் சென்றார். பகவான் ஞானேசுவரரை எதிர்கொண்டு அழைத்துப்போய் மிகுந்த உபசாரத்துடன் ஆசனத்தில் உட்காரச்செய்து சுவாமி என்னகாரியமாக என்னிடம் வந்தீர் என, அவர் பகவானை நோக்கிச் சுவாமி வேறு விசேஷம் யாதொன்றுமில்லை, நான் தீர்த்தயாத்திரை போகவேண்டுமென்று உத்தேசித்து நாமதேவரை என்னோடு அழைத்துப்போகத் தேவரீரை உத்தரவு கேட்க வந்தேன் என்றார். அதைக்கேட்ட பகவான் விசனத்தோடு சுவாமி நாமதேவன் பிறந்த நாள்முதல் இதுவரையில் என்னை விட்டுப் பிரிந்ததில்லை, இப்போது எவ்விதம் அவனைவிட்டுப் பிரிந்திருக்கப்போகிறேன் என்றார். ஞானதேவர் மிக

ஆச்சயரிமடைந்து ஆஹா என்ன அதிசயம், நாமதேவன் மேல் பகவானுக்கிருக்கிற வாஞ்சை ருக்மணியிடம் கூட இராதுபோல் காணுகிறது, ஆஹா! ஏதோ உலகத்தில் ஜனங்கள் நாமும் பகவத் பக்தி பண்ணுகிறோம் என்று சொல்லுகிறார்களே; என்ன பக்தி, பக்தி பண்ணினால் நாமதேவரைப்போலல்லவோ பக்தி பண்ணவேண்டும் என்று ஸ்தோத்திரம் பண்ணி, ஹே பாண்டுரங்கா-நாமதேவரை என்னோடு அனுப்பி அநுக்கிரகம் செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தார். பகவான் பண்டரீநாதர் ஞானதேவர் மனதின்படி நாமதேவர் கையைப் பிடித்து அவரிடம் ஒப்பித்துச் சுவாமி என் பிராணதாரமான நாமனை உம்மோடு அனுப்புகிறேன், நீர் ஜாக்கிரதையாகக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியது என்று இரண்டு கண்களிலும் நீர் தாரைதாரையாகப் பெருகவிட்டுச் சொல்லுவதைக் கேட்ட ஞானதேவர் ஆஹா நாமதேவருடைய பாக்கியமே பாக்கியம் என்று ஆனந்தமடைந்து அவரை அழைத்துக்கொண்டு யாத்திரைக்கு புறப்பட்டார். பகவான் நாமதேவரை நோக்கி அப்பா ஞானதேவர் சாமான்னியரல்லர்; பரப்பிரம்மசொரூபம், ஞானமே வடிவுகொண்டு அவதரித்திருக்கிறார்; அவரோடு போய் அவர் மனம்போல் நடந்துகொள், சதா என்னை ஸ்மரணைபண்ணு என்று ஆக்ஞாபித்து ஞானதேவரை நோக்கிச் சுவாமி குழந்தை நாமனை எவ்விதம் பிரிந்திருப்பேன், உமது தாக்ஷண்ணியம் தள்ளமாட்டாமல் நாமனை உம்மோடு அனுப்புகிறேன்; மிக ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லி இருவரையும் வழிவிட்டு அனுப்புவதற்காக பகவானும் அவர்கள் கூடவே சென்றார்.

நாமதேவர், ஞானதேவர் இருவரும் சந்திரபாகாவில் ஸ்நானம் பண்ணி ஸ்ரீ பண்டரீநாதனைச் சேவித்து புறப்பட்டார்கள். பகவான் கன்று இழந்த பசுபோல் தத்தளித்து விசனத்தோடு நாமதேவரைப் பிரிந்ததுமுதல் கண்ணும் கண்ணீருமாகக் கோவில் வந்து சேர்த்தார். அப்போது ருக்மணிதேவி பகவானுடைய சிரமத்தைப் பரிகரித்துச் சுவாமி, கண்களில் ஜலம் பெருகவிட்டு வந்தீரே, என்னகாரணம் என, ஹே சகி நமது நாமனை ஞானதேவரோடு துணைகூட்டி யாத்திரை போக அனுப்பியிருக்கிறேன்; அவனை விட்டுப் பிரிந்தது முதல் எனக்கு ஆறுத்துயரமாயிருக்கிறது, வேறு யாதொன்றுமில்லை, என் புத்தி ஒன்றிலும் பிரவர்த்திக்கிறதில்லை; நான் ஜகத்திற்கு மூலாதாரமான விருக்ஷம், அவ்விருக்ஷத்திற்குக் குழந்தை நாமன் ஜலரூபமாயிருக்கப்பட்டவன், அந்த ஜலத்தை ஞானதேவர் பானம் பண்ணி போய்விட்டார் என, ருக்மணி ஹே ஜனார்த்தன, ஹிருதயகமலவாசா,

ஆபத்பாந்தவா, கிருபாசமுத்திரமே, பக்தபாரதியானி, தேவரீர் சர்வ வியாபகர், சர்வாந்தரியாமி, பக்தர்களுடைய ஹிருதய கமலத்தில் வாசம் பண்ணிக்கொண்டிருக்கிற தேவரீர் ஏன் விசனப்படுகிறீர் என்று மனதைத் தேற்றினாள்.

ஞானதேவரும் நாமதேவரும் வழிநடக்கையில் ஞானதேவர் நாமதேவரை நோக்கி ஹே நாமதேவா எவ்விதம் ஸ்ரீ பண்டரீநாதனைப் பக்திபண்ணிக் கைவசப்படுத்திக் கொண்டாய், உன்னைப்போல் பண்டரீநாதனை அந்தரங்க பக்திபண்ணுகிறவன் கிடையாது, ஸ்ரீ பாண்டுரங்கனுடைய தயவினால் உன் சிநேகம் அடைந்தேன், நான் நிரம்ப கிருதார்த்தனானேன் என்று கீர்த்தன நர்த்தனம் செய்து கொண்டு அஸ்தினாபுரி வந்து சேர்ந்தார்கள். நாமதேவர் ஆனந்தமாக பகவத் பஜனை செய்துகொண்டு வீதி வழியாகப் போக ஜனங்கள் எல்லாரும் அவர்களோடு சேர்ந்து பஜனை பண்ணி ஆனந்தக்கண்ணீர் பெருகவிட்டு ஸ்தோத்திரம் பண்ணினார்கள். அவ்வூர் பாதுஷா நாமதேவரோடு தர்க்கித்து அவமானப் படுத்த வேண்டுமென்று நினைத்து அவர் பஜனை செய்கிற இடத்திற்குப் போய்ச் சேர்ந்து ஓர் இறந்து போன பசுவை அவர் முன்பாகப் போட்டு இதை நீர் பிழைப்பிக்க வேண்டும், இல்லாவிடில் உம்மைக் கொன்று போடுவேன், எத்தனை நாளில் பிழைப்பு மூட்டுவீர், ஒரு கெடு சொல்லவேண்டும் என, அவர் நாலுநாளில் பாண்டுரங்கன் கிருபையால் பிழைக்கச் செய்கிறேன் என்றார். பாதுஷா தனது சிப்பாய்களை நாமதேவரைச்சுற்றி மொஹசூல் வைத்து அரண்மனை போய்ச் சேர்ந்தான். நாமதேவர் பகவானைக் குறித்து ஹே பக்தவச்சலா, புராண புருஷோத்தமா என்னை ஆபத்திலிருந்து காப்பாற்றலாகாதா, பாதுஷாவின் மொஹசூலில் அவதிப்படுகிறேன், ஹே ஜனார்த்தனா, ஹே அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகா, என்னைக் கொலை செய்யவேண்டுமென்று மொஹசூலில் வைத்திருக்கிறான், இந்தச் சமயத்தில் என்னை காப்பாற்றவேண்டும், என்று பிரலாபித்துப் பிரார்த்தித்தார். உடனே பகவான் நாமதேவருக்குப் பிரசன்னமாகி ஆலிங்கனம் பண்ணி அப்பா உனக்கு என்ன ஆபத்து நேரிட்டது, எதற்காக நீ என்னை ஸ்மரித்தாய், உன்னைச் சுற்றிலும் நிற்கிறவர்கள் யார், யாருடைய மொஹசூலிலிருக்கிறாய் என்று கேட்க, நாமதேவர் பகவானை நோக்கிச் சுவாமி இதோ கிடக்கிறது இறந்தமாடு, இதை உயிர்ப்பிக்க வேண்டும், இல்லாவிடில் என்னைக் கொலைசெய்வதாக பாதுஷா கடுமையாகக் கட்டளையிட்டுப் போயிருக்கிறான் என்றார். பகவான் பசுவி

டம் போய் சிரசுமுதல் பாதம் வரையில் தடவிக்கொடுக்க, பசு படுத்து எழுந்ததுபோல் எழுந்திருந்தது. நாமதேவர் பகவானைப் பிரதக்ஷண நமஸ்காரம் செய்து நிற்க,பகவான் நாமதேவரை ஆசீர்வதித்து அந்தர்த் தானமானார். பாதுஷா, நாமதேவர் செய்த அற்புதத்தைக் கேள்விப் பட்டு ஓடி வந்துச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்துச் சுவாமி : தேவரீ ருடைய மகிமை தெரியாமல் மொஹசூலில் வைத்துத் தொந்திரவு செய்தேன். நான் செய்த அபசாரம் பொறுத்து இரக்ஷிக்க வேண்டு மென்றுப் பிரார்த்திக்க, அவர் பாதுஷாவை ஆசீர்வதித்து உபதேசம் செய்தார். பாதுஷா அவருக்குக் காணிக்கை முதலானது கொடுத்துப சரித்துச் சிறிது நாள் தனது அரண்மனையில் வைத்துக்கொண்டு ஹரி கீர்த்தனகர்த்தனம் செய்து ஆனந்தபரிதனானான். பிறகு இருவரும் அஸ்தினபுரம் விட்டுப் புறப்பட்டு அயோத்தி, கோகுலபிருந்தாவனம், துவாரகை போய் அங்கங்கெ தரிசனம் செய்துகொண்டு ஆரண்யமார் கம் வர, இருவருக்கும் தாகம் அதிகரித்துத் தீர்த்தம் அகப்படாமல் அவதிப்பட்டு நடந்து போகையில் ஓர் கிணறு கண்டார்கள். அந் தக் கிணற்றைப் பார்க்க ஜலம் பாதாளத்திலிருக்கிறதைக் கண்டு எவ் விதம் தாகசாந்தி பண்ணப்போகிறோம் என்று ஒருவருக்கொரு வர் பேசிக்கொள்ள, ஞானதேவர் சூக்ஷ்ம சரீரமெடுத்துக் கிணற்றி லிறங்கி தாகசாந்தி பண்ணிக்கொண்டு மேலே வந்து சேர்ந்தார். நாமதேவர் தாகத்தால் அவதிப்பட, ஏன் அவதிப்படுகிறாய், சூக்ஷ்ம சரீரமெடுத்துக் கிணற்றில் இறங்கித் தாக சாந்தி பண்ணலாகாதா என, அது எனக்குத் தெரியமாட்டாதே என்று சொல்லி பக வானை ஸ்தோத்திரம் பண்ண, பண்டரீநாதனுக்கு இடது கண் துடித் தது. பகவான் ருக்மணிதேவியை நோக்கி ஹே சகி என்ன கார ணமோ தெரியவில்லை, என் இடது கண் துடிக்கிறது, யாருக்கு என்ன ஆபத்து நேரிட்டிருக்கிறதோ, ஒருவேளை நமது நாமனுக்கு ஏதாவது ஆபத்தோ என்றார். ருக்மணிதேவி அதற்குத் தடையென்ன, நாம னுக்குத் தாகம் அதிகரித்துத் தீர்த்தம்அகப்படாமல்பிராணன் போகிற சமயத்திலிருக்கிறான் என்றாள். அதைக் கேட்ட பகவான் அந்தக் கிணற்றையும் நாமதேவரையும் மனதில் ஸ்மரித்தார். உடனே அந் தக் கிணற்றில் ஜலம் பெருகி ஆறாயோடத்தலைப்பட்டது. நாமதேவர் தாகசாந்தி பண்ணிக்கொண்டார். ஞானதேவர் அந்த அற்புதத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டு ஹே நாமதேவா என்ன அப்பா உன் மகிமை அபாரமாயிருக்கிறதே; சாக்ஷாத் பண்டரீநாதன் உனக்கு வசமானது போல் பூலோகத்தில் வேறொருவருக்கும் வசமாகவில்லை, உன் மகிமை

ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனும் வர்ணிக்க முடியாது என்று ஸ்தோத்திரம் பண்ணி ஆலிங்கனம் செய்துகொண்டு அப்பா உனது தரிசனம் பண்ணுகிறவர்கள் தீர்த்தயாத்திரை பண்ணவேண்டிய தில்லை, சகலமும் உன்னிடம் காணலாம், உன் மகிமை அபாரமானது என்று ஆனந்தக்கண்ணீர் பெருக விட்டுக்கொண்டு வழிநடந்து ஸ்த லங்கள் தோறும் தீர்த்த ஸ்நானம் செய்து பகவத்தரிசனம் பண்ணிக் கொண்டு, ராமேசுவரம் வந்து ராமலிங்கனைத் தரிசனம் பண்ணி, ஆவிடையார் கோவிலுக்குப் போய் ஆத்மநாதரைத் தரிசனம் பண்ணி, நாகநாதசுவாமி கோவிலுக்கு வந்து ஸ்நானம் செய்து நித்தியகர் மானுஷ்டானங்கள் முடித்து சந்திரமௌளீசுவரரைத் தரிசனம்செய்து மகாமண்டபத்திற்கு வந்து ஸ்ருதி லயத்தோடு பகவத் பஜனைபண்ண ஆரம்பித்து ஸ்ரீபாண்டுரங்கவிட்டலனைத் தியானித்து ஆனந்தமாய் ஹரிகீர்த்தன நர்த்தனம் செய்கையில், சகலமான ஜனங்களும் நாம தேவருடைய கீர்த்தனங்களைக் கேட்டு ஆனந்தபரிதர்களாய் மெய் மறந்து ஆனந்தக்கண்ணீர் பெருக விடுகிறதும், சிலர் தேகாபிமானம் விட்டுப் பகவானிடம் சித்தத்தை லகிக்கச் செய்து ஸ்தம்பமாக நிற்கிற வர்களும், சிலர் நாமதேவரோடு பகவந்நாமம் உச்சரித்து நர்த்தனம் பண்ணுகிறதுமாய் ஆனந்தத்தில் மூழ்கியிருக்க, கோவில் குருக்கள் காலையில் ஸ்நானம்செய்து சன்னிதி திறக்க வந்தார்கள். அப்போது சன்னிதி போவதற்கு மார்க்கமில்லாமலிருக்கிறதைக் கண்டு, என்ன சன்னிதியை அடைத்துக்கொண்டிருக்கிறீர்களே,ஓய்! யாருங்காணும் தம்பூர்க்காரரே, இங்கே என்னங்காணும் சிவன்கோவிலில் ஹரிகீர்த் தனையும், பஜனையும்! ஓய் நாமதேவரே: இதென்னங்காணும் ஆடலும் பாடலும்! நாங்கள் கோவில் பூஜைபண்ணப் போகவேண்டும், சுவாமி தரிசனத்திற்கு வருகிறவர்கள் போகிறவர்களுக்கு வழியில்லாமல் அடைத்துக்கொண்டு பெருங் கூச்சலிட்டுக்கொண்டிருக்கிறீர்; ஓய் போங்காணும், கோவிலுக்குப் பின்னால் போம், இந்த க்ஷணமே இந்த இடத்தை விட்டு விலகும் என்று சற்றுக் கோபத்தோடு சொன் னார்கள். அதைக்கேட்ட நாமதேவர் கோஷ்டியோடு கோவிலுக்குப் பின்னால் போய் பஜனை பண்ணுகையில் ஆகாசத்தில் தேவதுந்துபி முழங்கத் தேவர்கள் நாமதேவருடைய கீர்த்தன நர்த்தனம் கேட்க வந்து இறங்கினார்கள். நாமதேவருக்கு அதிக ஆனந்தமுண்டாகி ஸ்ரீ பண்டரீநாதரைத் தியானித்து பஜனைபண்ண, நாமதேவருடைய கீர்த் தன நர்த்தனம் கேட்டு ஆனந்திக்கவேண்டுமென்று கிழக்கு முகமா கயிருந்த பார்வதிரமணர் நாகநாதசுவாமி மேற்கு முகமாகத் திரும்ப,

ஜனங்கள் அதைக் கண்டு ஆச்சரியப்பட்டுத் தேகம் பரவசமானவர்களாய் ஆனந்தத்தில் மூழ்கினார்கள். அப்போது குருக்கள் ஸ்நானம் செய்து ஜபதபங்கள் முடித்துக் கோவிலுக்கு வந்து நாகநாதருக்கு அபிஷேகம் செய்யத் தீர்த்தம் எடுத்துக்கொண்டு சன்னிதி வர, ஈசுவரன் மேற்கு முகமாகத் திரும்பியிருக்கிறதைக் கண்டு இதென்ன ஆச்சரியம், எல்லாம் நாமதேவருடைய கீர்த்தன மகிமை போல தோன்றுகிறது. அப்பேர்ப்பட்டவரை சன்னிதியில் பஜனைபண்ண வேண்டாம் என்று மானக்கேடாகப் பேசினோமே, அவர் மகிமை தெரியாமல் தூஷித்தோம் என்று அநுதாபப்பட்டு நாமதேவர் பாதத்தில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து நாங்கள் செய்த அபசாரம் பொறுத்துக் கிருபை பண்ணவேண்டுமென்று பிரார்த்திக்க, அவர்களுக்கு உபதேசம் பண்ணி ஆசீர்வதித்துப் பஜனைகோஷ்டியிலிருந்து எழுந்து பகவானுக்குக் கல்பூர ஆராதனை எடுத்து ஸ்ரீநாகநாதசுவாமியைத் தரிசனம் பண்ணி அவ்விடம் விட்டுப் புறப்பட்டு ஸ்ரீ பண்டரீபுரம் வந்து சேர்ந்தார்கள்.

நாமதேவர், ஞானதேவர் இருவரும் பண்டராபுரத்திற்கு வந்து பகவானுடைய சன்னிதி அடைந்துப் பிரதக்ஷண நமஸ்காரம் செய்து ஸ்தோத்திரம் பண்ண, பகவான் ஓடிவந்து நாமதேவரை ஆலிங்கனம் பண்ணி ஆனந்தபரிதராய் அப்பா நீ யாத்திரைக்குப்போன நாள்முதல் எனக்குக் கோவிலிலிருக்க மனம் சகிக்கவில்லை, உன்னை விட்டுப்பிரிந்ததினால் என் மனம் தத்தளித்தது ஸ்ரீருக்மணிக்குத் தெரியுமே தவிர வேறொருவருக்கும் தெரியாது, எனக்குச் சரியான அன்ன, ஆகாரம், நித்திரையில்லை என்றார். அதற்கு நாமதேவர், சுவாமி:சகல க்ஷேத்திரங்களும், சகல தீர்த்தங்களும், தேவரீர் சன்னிதானமாகிய இவ்விடத்திலேயே இருக்கிறது, அது தெரியாமல் அக்ஞானத்தினால் அலைந்து திரிந்தோம்; என் மாதா, பிதா, குரு, தெய்வம் நீரே என்றுச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். பகவான்: அப்பா நாமதேவா நீ போனது முதல் எனக்கு அன்ன ஆகாரமில்லை, சதா உன் நினைவே, நீ இல்லாமல் பண்டரீபுரத்துக்கு மகிமை இல்லாமல் போய் விட்டது. என் கண்மணியே, இனி நீ என்னை விட்டு ஒரு நிமிஷம் கூடப் பிரியக்கூடாது என்று தமது திவ்ய அஸ்தத்தினால் தேகம் முழுதும் தடவிக்கொடுத்துச் சிரம பரிகாரம் செய்துக் கழுத்திலிருந்த துளசி மாலையை எடுத்து நாமதேவர் கழுத்தில் போட்டுக் கொஞ்சிக் குலாவுவதை ஞானதேவர், சொபானுதேவர், நிவர்த்தி தேவர் முதலான சகல பக்தர்களும் கண்டு பிரமானந்தமடைந்துப் பகவானைப்

பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, நாமதேவரை ஆலிங்கனம் பண்ணி ஆனந்தமாக நாமகீர்த்தனம் செய்தார்கள். பகவான் ருக்மணிதேவியை நோக்கி சகி, நமது நாமன் தீர்த்த யாத்திரை போய் வந்தானே அதற்காக உத்தியாபனம் செய்யவேண்டுமே, கிரகத்தில் சகலசாமான்களும் சித்தமாயிருக்கிறதா ? என்று கேட்க, சுவாமி: தேவரீருடைய சங்கல்பம் நிறைவேறவேண்டுமானால் சாமான்களில்லாமல் போய் விடுமா! கிரகத்தில் சகல சாமான்களும் சித்தமாயிருக்கிறது என்றாள். பகவான் நாமனை அழைத்துக்கொண்டு புறப்பட்டு ஊரில் ஒரு வீடு பாக்கியில்லாமல் ஒவ்வொரு கிரகத்திலும் புகுந்துச் சுவாமி: நமது நாமன் தீர்த்த யாத்திரை போய் வந்தான்; அதற்காக நாளை தினம் உத்தியாபனம் செய்ய உத்தேசித்திருக்கிறேன், சகலரும் போஜனத்துக்குக் கிருபை செய்யவேண்டும்? பிராமண போஜனம் கோவிலில் நடக்கிறது ; இரண்டாம் தடவை அழைக்க மனுஷன் இல்லை என்று ரொம்ப உபசாரமாக அழைத்துக்கொண்டே ஊர் வலம் வருகிற வைகுண்டவாசியாகிய ஸ்ரீ பாண்டுரங்கனைப் பிராமணர்கள் பார்த்துச் சுவாமி தேவரீர் யார், எந்த ஊர், தமது நாமதேயம் என்ன என்று கேட்டார்கள். அதற்கு பகவான்: சுவாமிகளே என் பூர்வோத்திரம் நாமதேவருக்குத் தெரியும், அவரை கேட்டுக்கொள்ளுங்கள், அவர் தீர்த்தயாத்திரை போய்ப் பிராமண சமாராதனை பண்ணுகிறார் ; எல்லாரும் தயவு செய்யவேண்டும், சீக்கிரமாக வந்து சேரவேண்டும் என்று சொல்லிக் கோவிலுக்கு வந்து, ஹே ருக்மணி ! நாங்கள் பிராமணர்களை அழைத்துவர, பிராமணர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து என்னை நோக்கிச் சுவாமி, நீங்கள் எந்த ஊர், உங்கள் நாமதேயம் என்னவென்று கேட்டார்கள், நாமதேவருக்குத் தெரியும் என்று சொல்லி வந்தேன் என்றார். அதைக்கேட்ட ருக்மணிதேவி சுவாமி தேவரீர் மகிமை பிரமாதி தேவர்களும் அறியமாட்டார்களே, அப்படியிருக்க இந்த கர்மாபிமானிகளான பிராமணர்களா அறியப்போகிறார்கள், தேவரீர் நாமனுக்கு நிஜதெய்வம், நாமன் தேவரீருக்கு நிஜபக்தன், அது விஷயம் அவர்களுக்குத் தெரியுமோ என்று வாழ்த்தினாள்.

ஸ்ரீ பாண்டுரங்கன் பிராமணர்களைப் போஜனத்திற்கு அழைத்து வந்ததும், சமையலுக்கு ஆரம்பம்செய்ய உத்தேசித்து காமதேனுவை ஸ்மரித்தார். உடனே காமதேனு பிரசன்னமாகிப் பகவானுடைய ஆக்ஞைபடி ஷட்ரஸத்தோடு பக்ஷபோஜனாதிகள் தயார்செய்து வைத்தாள். நாமதேவருக்குச் சுகந்த தைலாதிகளால் ஸ்நானம் பண்ணுவித்து, அலங்காரம் செய்து ருக்மணிதேவியும், சத்தியபாமையும்,

Q22:417 N12

ஆலார்த்தி எடுத்துத் திருஷ்டிகழிக்க, பகவான் பிராமணரூபந்தரித்து பிராமணர்களுக்கு ஆசனம் அளித்து அர்க்கியபாத்திய ஆசமனீயங்கள் கொடுத்து, புஷ்பம் சூட்டி, நெற்றியில் திலகமிட்டு ஆடை யாபரணங்களால் அலங்கரித்துப் பிராமணர்களைப் பந்தி பந்தியாக உட்காரவைத்து இலைபோட்டுப் பரிமாறினார்கள். எல்லோரும் போஜனம் பண்ண, பகவான் பந்தி விசாரித்து அவரவர்களுக்கு வேண்டிய பதார்த்தங்கள் குறைவில்லாமல்பரிமாற, போஜனம் பண்ணி எழுந்ததும் பகவான் ஜலம் கொடுத்துக் கையலம்பச்செய்துச் சந்தன புஷ்பங்களால் அலங்கரித்துத் தாம்பூலம் கொடுத்து நமஸ்காரம்பண்ணி, ஹே சுவாமிகளே, எல்லாரும் சற்று நேரம் சிரம பரிகாரம் பண்ணிக்கொண்டிருங்கள் ; நாங்கள் எல்லோரும் சாப்பிட்ட உடனே உங்களுக்குத் தக்ஷிணைகொடுத்து அனுப்புகிறேன் என்றார்; பிராமணர்கள் அக்ஷதை கொடுத்து ஆசீர்வதித்து எப்போதும் எங்களை இவ்விதமாக சம்ரக்ஷணைபண்ணிக்கொண்டிருக்கக் கடவீர்கள் என்று சொல்ல, பகவான் அக்ஷதையைத் தமது திவ்ய அஸ்தத்தில் வாங்கி நாமதேவர் சிரசில் போட்டு என் மேல் எப்போதும் பக்தியாய் இருக்கக்கடவது என்றார். பிறகு ஞானதேவர், சொபானுதேவர், நிவர்த்திதேவர் முதலான பக்தர்களோடு ஸ்ரீ பண்டரீநாதர் போஜனத்திற்கு உட்கார்ந்தார். ருக்மணிதேவி பரிமாற எல்லாரும் போஜனம் செய்கையில் பகவான் நாமதேவரைச் சமீபம் உட்காரவைத்துக்கொண்டு சாதம் ஊட்ட, நாமதேவர் பகவானுக்கு ஊட்ட, இருவரும் மற்றவர்களோடு சாப்பிட்டு எழுந்தார்கள். அவைகளை பார்த்துக்கொண்டிருந்த பிராமணர்கள் சீ, சீ, இதென்ன அலங்கோலம், இவர்களும் பிராமணர்களா! சந்தேகமாயிருக்கிறதே, இதென்ன அநியாயம், ஒருவருக்கொருவர் உச்சிஷ்டம் சாப்பிடுகிறார்கள், இவர்கள் வீட்டில் நாமெல்லோரும்சாப்பிட்டோமே, நமது ஜன்மம் வியர்த்தம், ஆனா பரிமாறினார்களே, அந்த ஸ்திரீகள் என்ன ஜாதியோ தெரியவில்லை, பாவைக்கு பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்கள் என்கிற நான்கு வருணத்தில் ஒன்றிலும் சேரவில்லையே ; பந்தி விசாரணை செய்தவரைப் பார்த்தால் நாமதேவர் பிதா போலிருக்கிறது; நாமதேவரைக் கொண்டு சங்கல்பமும், தத்தமும் பண்ணிவைத்தார்; நாம் கொடுத்த அக்ஷதயை அவர் தலையில் போட்டார், அதினால் நாமதேவர் பிதா என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் அவரைப் பார்த்தால் சிலசமயம் பிராமணனாகவும், சிலசமயம் வேறு விதமாகவும் தோன்றுகிறது; ஒரு விதமாக இல்லையே, ரொம்ப அநியாயமாக அல்லவோ

இருக்கிறது ; இனி பேசுவதில் பிரயோஜனமென்ன, பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டியதைத் தவிர வேறு விதியில்லை, எல்லாரும் எழுந்திருங்கள், தக்ஷிணையும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம், வீடு போய்ச் சேருவோம் என்று புறப்பட்டார்கள். பகவான் அவர்களை வழி மறைத்துச் சுவாமிகளே : என்ன கோபம், முகம் பார்த்தால் ஏதோ சந்தேகக்குறி காணப்படுகிறதே, என்ன சந்தேகம் தங்களுக்கு உண்டாச்சுது; தக்ஷிணை வாங்கிக்கொண்டு போகலாமே என்று நாமதேவரை அவர்கள் பாதத்தில் போட்டுச் சுவாமிகளே : நீங்கள் எல்லாரும் நாமனிடம் கிருபை பண்ணிக் காப்பாற்றவேண்டும், உங்கள் மனதிலிருக்கிற சந்தேகத்தையும் சொல்லுங்கள் என்றார். பிராமணர்கள் : ஹே சுவாமி, நாமதேவர் தையல்கார ஜாதி என்பது நமக்குத் தெரிந்த விஷயம். அப்படிப்பட்டவரைப் பிரத்தியக்ஷமாகப் பந்தியில் வைத்துக்கொண்டுச் சாப்பிட்டதல்லாமல் நாங்கள் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அவர் உச்சிஷ்டத்தையும் சாப்பிட்டுத் துலைத்தீர், இதென்ன அநியாயம், உம்மைப் பார்த்தால் வேஷதாரிபோலிருக்கிறதே அல்லாமல் வேறில்லை, உமது ஜாதி இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை, உமது வேஷம் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறுகிறது; நிந்தையும், ஸ்துதியும் சமமாக எண்ணுகிறீர், நீர் பிராமண வேஷம் தரித்து வந்தமையால் நாங்கள் போஜனம் பண்ணினோம், உங்கள் பிராமணக் கிருத்தியம் வேத சம்மதமாகுமா ? உங்களைப் பார்த்தால் சர்வக்ஞர்களாகத் தோன்றுகிறது, வேத சம்மதமில்லாமல் நாமதேவரைப் பந்தியில் வைத்துக்கொண்டுச் சாப்பிட்டீர்களே என்று சொன்னதைக்கேட்ட பகவான்-ஹே பிராமணர்களே : நாமதேவருடன் போஜனம் பண்ணினோம் என்று தோஷம் சொல்லக்கூடாது, பரமாத்மா எல்லோருக்கும் ஒருவரே, பகவான் சர்வாந்தர்யாமியாகிய நான் பரிசுத்தன், நிரஞ்சனன், சர்வவியாபகன், சர்வாந்தர்யாமியாகயிருக்கிறேன், தேகத்திற்கு தையல்கார ஜாதி என்று சொல்லுகிறீர்களே, எந்த அவயவத்திற்கு தையல்கார ஜாதி என்று சொல்லுகிறீர்கள், ஜாதி என்று தேகத்துக்குச் சொல்லுகிறதா, ஆத்மாவுக்குச் சொல்லுவோமானல் அதற்கு ஜாதி குலமில்லை, தேகத்துக்குச் சொல்லுவோமானல் ஐம்புலன்களின் கிருத்தியமாகயிருக்கிறது, வேதவித்துக்களே-சகல சாஸ்திர நிபுணர்களான பிராமணோத்தமர்களே-நாமதேவரைக்கொண்டு சங்கல்பம் பண்ணிவைக்கும்போதும், தத்தம் பண்ணும்போதும் ஏன் விசாரியாமல் இருந்துவிட்டீர்கள், நீங்கள் கொடுத்த அக்ஷதை அவன்

சிரசில் போட, அதையும் பார்த்துக் கொண்டிருந்தீர்களே, நான் என்ன சொல்லியும் நமது மர்மம் அறியவில்லையே, நாங்கள் நாமதேவருடைய உச்சிஷ்டம் சாப்பிட்டதற்கு பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டியதாயிருந்தாலும் சொல்லுங்கள், சாதுக்கள் சரண தீர்த்தமும், பிராமணர்கள் பாத தூளியும் பிராயச்சித்தமாக உட்கொள்ளலாம் என்று தோன்றுகிறது, உங்கள் அபிப்பிராயத்தையும் சொல்லுங்கள், நான் பக்தர்களிடம் வாசம் பண்ணிக்கொண்டிருக்கிறேன், பக்தர்களும் ஒரே பிடிவாதமாகவும்,நிர்ப்பயமாகவும், அர்த்தம், தர்மம், கர்மம், மோக்ஷம் என்கிற சதுர்வித முக்தியையும் திரணமாக எண்ணி என் நாமத்தை ஆனந்தத்தோடு பஜனை பண்ணிக்கொண்டு வைராக்கிய சீலர்களாய் என்னிடத்திலேயே வாசம்பண்ணுகிறார்கள். அப்பேர்ப்பட்ட பக்தர்களில் தையல்கார ஜாதியாகிய நாமதேவரைத் தவிர என் மனதிற்கு வேறொருவரும் பிரியமானவராகக் காணப்படவில்லை. ஆகையால் நான் அவர் உச்சிஷ்டம் போஜனம் பண்ணினேன். இந்தப் பண்டரீக்ஷேத்திரத்திற்குத் தக்ஷிணபாகம் பிரவாகிக்கிற சந்திரபாகாவைத் தூரயிருந்துக் கண்களால் பார்த்தமாத்திரத்தில் சகல பாவங்களும் நிவர்த்தியாகிப் புனர் ஜன்மத்திலிருந்து நீக்கப்படுகிறார்கள்; அப்பேர்ப்பட்ட க்ஷேத்திரத்தில் என் பக்தர்கள் வாசம் பண்ணிக்கொண்டு எனது நாமகீர்த்தனம் செய்து நிர்பயமாக இருப்பார்கள் என்று சொல்ல, பிராமணர்கள் ஹே சுவாமி-தேவரீர் அனந்தகலியாண குணநிதி என்று தெரியவந்தது, ஆனாலும் வேதத்தில் சொல்லியிருக்கிற தர்மத்தை அநுஷ்டிக்கவேண்டியது, பிராமணர்களுக்கு சத்தியம், பக்ஷாத்தாபம், பூததயை, ஸ்நான சந்தியாவந்தனம், அக்கினிஹோத்திராதி ஹோமங்கள், அதிதிபூஜை இதுகள் சுயதர்மமாகயிருக்கிறது; அதுகளைச் செய்து வந்தால் பகவானுக்குப் பிரீதியுண்டாகும், அந்தச் சுயதர்மம் விட்டால் பிராமணத்துவம் போய்விடும்; ஆகையால் தேவரீர் சந்திரபாகாநதிக்குப்போய் விதிபூர்வமாக ஸ்நானம் செய்து புண்ணியாகவாசனம் பண்ணி, பஞ்சகவ்வியம் உட்கொண்டால் பிராயச்சித்தமாகும், உங்கள் முன்னோர்கள் கடைத்தேறி விடுவார்கள் என்று சொன்னதைக்கேட்ட பகவான் நல்லது சுவாமிகளே! தங்கள் ஆக்ஞைபடி நடக்கிறேன்; உங்களிடத்தில் விசுவாசமிருக்கிற எனக்கு குலதெய்வமாயிருக்கிற நீங்கள் என்னை ஸ்நானம் பண்ணச் சொல்லுகிறீர்களே, ஸ்நானத்தினல் என்ன பிரயோஜனம், ஸ்நானத்தின் விவரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள்: முதல் ஸ்நானம் - அந்தரங்கசுத்தி, இரண்டாவது-சமஸ்த

இந்திரியங்களும் சுயாதீனம் பண்ணிக்கொள்ளுகிறது, மூன்றுவது- சர்வ பிராணிகளிடத்திலும் பூததயை, பக்ஷாத்தாபத்தோடு இருக்கிறது, நான்காவது - சந்தியாவந்தனுதிகள், அக்கினிஹோத்திராதி ஹோமங்கள், ஐந்தாவது ஸ்நானம் - சாதாரண ஸ்நானம், ஐந்தாவது ஸ்நானம் பண்ணுவதால் காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸரியம் முதலியன நிவர்த்தியாகுமா, ஆகாது, விவேகத்தால் வைராக்கியத்தோடு அந்தரங்க சுத்தியாய் பகவத்பக்தி, சாதுக்கள் சங்கம் பண்ணவேண்டும், சுவாமிகளே-தேவரீர்களுடைய ஆக்ஞைபடி சந்திரபாகையில் ஸ்நானம் செய்து வருகிறேம் என்று சொல்லி நாமதேவரை அழைத்துக்கொண்டு சந்திரபாகா நதியில் விதிப்படி ஸ்நானம் செய்துப் பிராமணர்களுக்குத் தக்ஷிணைகொடுத்து அநேக பக்தர்கள் கூட்டத்தோடுக் கோவிலுக்கு வந்து சேர்ந்தார்.

பகவான் பாண்டுரங்கன் பிராமணர்களுடைய ஆக்ஞைபடி நாமதேவர் முதலான பக்தர்களுடன் சந்திரபாகையில் ஸ்நானம் செய்து பிராயச்சித்தம் பெற்றுக் கோவில் வந்து சேர்ந்ததும் நாரதபகவான் பகவத் சன்னிதி வந்துச்சேவித்துக் கீர்த்தன நர்த்தனம்செய்து ஆனந்தமடைந்து ஆக்ஞைபெற்று சத்தியபாமையிடம் போய்ச்சேர, சத்தியபாமை நாரதரை எதிர்கொண்டழைத்துப் பூஜித்துச் சுவாமி: என் பிராணநாதராகிய வைகுண்டநாதர் பக்தர்களோடுச் சேர்ந்துக் கூத்தாடுகிறதும், நாமதேவரிடம் முன் ஜன்மத்தில் கடன் பட்டதின் மேல் அவர் மனோபீஷ்டங்கள் நிறைவேற்றுகிறதுமாய் வேலை சரியாகயிருக்கிறது, அவர் என்னைத் திரும்பிக்கூட பார்க்கிறதில்லை, பலிசக்கிரவர்த்தி வாயிலில் அத்தியாபி பாராகொடுத்துக்கொண்டிருக்கிறார், பாண்டவர்களுக்குச் சகல விதத்திலும் ஒத்தாசை செய்துக் காப்பாற்றுகிறார், அநேக பக்தர்களுக்கு அநேக விதமான கூலி வேலைகளெல்லாம் செய்து முடிக்கிறார், அவர் வேலை இன்னதென்று அளவிடமுடியாது, அபாரமாயிருக்கிறது, பக்தர் இஷ்டத்தை பரிபூர்ணம் செய்கிறதே அவர் வேலையாகயிருக்கிறது, பகவான் தன் பிரபுத்துவம் பாராட்டுகிறதில்லை, அகிலலோக கர்த்தராயும், சிருஷ்டி, பாதுகாப்பு, சம்ஹாரமாகிய கிருத்தியங்களுடையவராயும், விராட் சொரூபராயும், சர்வாந்தர்யாமியாயுமிருக்கப்பட்டவர், ஏன் இவ்விதமாக பக்தர்களோடு கூத்தாடுகிறார் என்று கேட்க, நாரதர் சொல்லுகிறார், அம்மா: ஜகத்மாதாவே, நிர்குண, நிரஞ்சன, நிராமய, சர்வபரிபூர்ணராயிருக்கிற ஸ்ரீ பாண்டுரங்கன் பக்தர்களை இரக்ஷிக்கும்பொருட்டே அவதரித்திருக்கிறார், நாமதேவரிடம் பூர்ணகிருபை வைத்திருக்கிறார்,

அவருக்காகவே அவதாரமெடுத்திருக்கிறார் என்று சொல்லி ஆக்ஞை பெற்றுப் பிரம்மலோகம் போய்ச் சேர்ந்தார்.

பகவான்: நாமதேவர் தீர்த்தயாத்திரை செய்துவந்ததில் இரண்டாவது தடவை உத்தியாபனம் செய்ய உத்தேசித்து, ஸ்ரீபாண்டுரங்கன், நாமதேவர் முதலான பக்தகோஷ்டி சமேதராய்ப் புறப்பட்டுப் பிராமணர்கள் வீடு ஒவ்வொன்றாய்ப் பிரவேசித்துச் சுவாமிகளே, நாமதேவர் தீர்த்தயாத்திரை போய் வந்ததால், இரண்டாவது தடவை சமாராதனை கோவிலில் நடக்கிறது, நீங்கள் எல்லோரும் போஜனத்திற்குக் கிருபைபண்ணவேண்டும் என்று சொல்லிக்கோவிலுக்கு வந்து ருக்மணியை நோக்கி, ஹே சகி, பிராமணர்கள் வந்து விடுவார்கள், சீக்கிரம் சமையல் முடியட்டும் என, சுவாமி: தேவரீர் அடிக்கடி பிராமணர்களைப் போஜனத்திற்கு அழைத்து அவர்களுக்குத் தரிசனம் கொடுக்கிறதும், தமது திவ்ய அஸ்தத்தினால் பரிமாறுகிறதும், அவர்கள் போஜனம் பண்ணுகிறதும், பார்க்க ஆனந்தமாக இருக்கிறது, பிராமணர்கள் ரொம்ப பாக்கியசாலிகள் என்று சொல்லுகையில் பிராமணர்கள் வந்து சேர்ந்தார்கள். பகவான் பிராமணர்களுக்கு அர்க்கியபாத்திய ஆசமனீயங்கள் கொடுத்து ஆசனத்தில் உட்காரச் செய்து இலைபோட்டுப் பரிமாற, பிராமணர்கள் ஆபோசனம் வாங்கி போஜனத்திற்கு உட்கார்ந்து, ஸ்ரீராமா, கிருஷ்ணா, கோவிந்தா என்று பகவந்நாமம் உச்சரித்துச் சாப்பிட்டு எழுந்தார்கள். பகவான் அவர்களுக்குத் தாம்பூலம் கொடுத்து உட்காரவைத்துச், சுவாமிகளே, நாங்கள் எல்லோரும் சாப்பிட்டு வருகிறோம், சற்று உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி, பகவான் பக்தகோஷ்டிகளுடன் போஜனத்திற்கு உட்கார்ந்தார். ருக்மணிதேவி பரிமாற, பக்தர்களோடு போஜனம் பண்ணுகிற பகவான் மந்தஹாசத்தோடு எழுந்து, எல்லாருடைய உச்சிஷ்டப் பிரசாதம் தன் பீதாம்பரத்தில் வாங்கி எல்லாருக்கும் கொடுத்துத் தாமும் போஜனம் பண்ணினார். அப்போதுப் பிராமணர்கள் ஆச்சரியப்பட்டு, இதென்ன விபரீதம், ஒருவர் உச்சிஷ்டம் ஒருவர் சாப்பிடுகிறார்களே, என்ன விந்தை என்று ஒருவருக்கொருவர் வார்த்தையாடி, ஆஹா நாம் அவரை சாமானியப் பிராமணன் என்று நினைத்தோமே, அவர் மானிடஜன்மமல்ல, அவரே ஸ்ரீபாண்டுரங்கன், அவர் கிர்த்தியங்களிலும், கர்மங்களிலும் ஒட்டாமலிருக்கிறார், நேற்றை தினம் அவருக்குப் பிராயச்சித்தம் பண்ணிவைத்தோம், அவருக்குச் சகல பிராணிகளும் சமம், அவருக்கு வர்ணாசிரமம் கிடையாது; சங்கல்பம், விகல்பம் கிடையாது என்று பகவானை ஸ்தோத்திரம்

பண்ணித் தேகம் பரவசமானுர்கள். பகவான் ஸ்ரீபாண்டுரங்கன் ஓர் சமயம் கோடிசூரியன் ஏக காலத்தில் உதயமானுற்போல் இரத்தின கசிதக் கிரீடத்தோடு மகர குண்டலதாரியாய், நீலமேக சியாமளராய், நீலோத்பல நேத்திரங்களோடு கூடினவராய், சங்கு, சக்கிர பீதாம்பரதாரியாய்த் தரிசனம் கொடுப்பார்; மற்றொரு சமயம் எதுகுல திலகராய், பக்தர்களுடைய சம்ரக்ஷணுர்த்தம் வாசாமகோசரராய் இரண்டு அஸ்தங்களையும் இடுப்பில் வைத்துக்கொண்டு மந்தஹாசத்தோடு பிராமணர்களுக்குத் தரிசனம் கொடுத்தார். அந்த ரூபத்தை ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேஷனுலும், பிரமாதி தேவர்களாலும் வர்ணிக்க முடியாது ; அப்பேர்ப்பட்ட ரூபத்தை பக்தர்களும், பிராமணர்களும் பார்த்து ஆனந்தமடைந்து சமுத்திரகோஷம் போல் நாமகீர்த்தனம் செய்துத் தேகம் பரவசமானுர்கள். பகவான் அந்த ரூபத்திலிருந்து திடீலென்று எங்கும் வியாபித்து சபாமண்டபம், ஜய விஜயாள், துவாரபாலகர்கள், பக்தர்கள், பிராமணர்கள், கோபுரங்கள் மாடமாளிகைகள் எதைப் பார்த்தாலும் கிருஷ்ணனுகவேத்தோன்றினுர்; தாளம், மிருதங்கம், தம்பூர், வீணை முதலான வாத்தியங்கள் கிருஷ்ணு கிருஷ்ணுவென்று நாமகீர்த்தனம் செய்தது. பண்டரீபுரத்தில் எங்கு பார்த்தாலும் கிருஷ்ணரூபமாகவும், எதைக்கேட்டாலும் நாமகீர்த்தன கோஷமாகவும் இருக்கிறதைப் பிராமணர்கள் கேட்டும், பார்த்தும் ஆனந்தித்துத் தேகம் பரவசமானவர்களாய் ஆஹா பிரமானந்தத் தரிசனம் கிடைத்தது, ஹேபதீதபாவனு புராணபுருஷோத்தமா என்று ஸ்தோத்திரம்பண்ணிச் சுவாமி: நாங்கள் எத்தனை ஜன்மமெடுத்தாலும் தேவரீரை பக்தி பண்ணும்படியாகவும், சதா பக்தர்கள், சாதுக்கள் கைங்கரியம் நடத்தும்படியாகவும் கிருபை பண்ணவேண்டியது; நாங்கள் எத்தனையோ ஜன்மம் எடுத்து வீணுகக் காலம்கழித்துத் தேகாபிமானிகளாய் அகங்காரத்தினுல் புத்தி மோசம் போனேம், பிரஜைகள் வீணுகக் கெட்டுப்போகிறுர்கள், எங்களைப் போலொத்த பாமரர்களுக்குத் தேவரீர் சுயரூபத்தோடுத் தரிசனம் கொடுத்து அக்ஞானமாகிய இருளைப்போக்கி இரக்ஷித்தீர்கள். அகண்டபரிபூர்ணராகியத் தேவரீருடைய சரணுர விந்தங்களில் எங்களுடைய மனது சதாசர்வகாலம் இருக்கும்படியாகக் கிருபைபண்ணவேண்டும். ஹே அகிலாண்டகோடி பிரமாண்டநாயகா எங்களைத் தேவரீருடைய பக்த கோஷ்டிகளுடன் சேர்த்துக் கிருபை பண்ண வேண்டுமென்று ஸ்தோத்திரம்பண்ண, பகவான் சந்தோஷமடைந்து, ஹே விப்பிரச்சிரேஷ்டர்களே, பூலோகத்தில் பாமரர்களை கடைத்தேறச் செய்வதற்

காகவே அவதரித்திருக்கிற என் சொரூபமாகிய ஞானதேவர் உங்களுக்கு ஞானமார்க்கத்தை உபதேசம் செய்வார். யாகம், யோகம், தபசு, அக்கினிஹோத்திரம் முதலான ஹோமங்கள் செய்து அவதிப்படவேண்டியதில்லை, சதா என் நாமகீர்த்தனம் செய்துகொண்டு பூததயை, பக்ஷாத்தாபத்தோடு சத்கர்மங்கள் செய்தால் நித்தியானநத்தோடு கூடியிருக்கலாம் என்று சொல்ல, பிராமணர்கள் சந்தோஷமடைந்து ஸ்ரீ ஜகன்னிவாசருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணி ஸ்தோத்திரம் பண்ணுகையில், பகவான் பிராமணர்களை ஞானதேவரிடம் ஒப்பிவிக்க, அவர் அவர்களுக்கு ஞானமார்க்கம் போதித்து உபதேசம் செய்தார். பிராமணர்களும் பிரமானந்தமடைந்து சதா பகவத்தியானமும் கீர்த்தனநர்த்தனமும் செய்து ஆனந்தபரிதர்களாய் தேகம் பரவசமானார்கள்.

ஒருநாள் ஸ்ரீபண்டரீநாதர் நாமதேவரை நோக்கி ஹே நாமா நான் சகல ஜீவராசிகளிலும் இருப்பேன், நான் சர்வாந்தர்யாமி என்று உனக்குத் தெரியுமா என்று கேட்க, நாமதேவர் ஹே அனாதபந்துத் தேவரீருடைய அநுக்கிரகத்தால் தெரியும், அல்லாமல் ஓர் காலத்தில் கோராகும்பர், பகவான் ஸ்ரீபண்டரீநாதருடைய சந்நிதானத்தில் கீர்த்தன நர்த்தனம் செய்து ஆனந்தபரிதர்களாகக் கிரகத்திற்குத் திரும்புகையில் ஞானதேவர், சோபானுதேவர், முக்தாபாயி முதலானவர்களைத் தனது கிரகம் அழைத்துச் சென்று அர்க்கியபாத்திய ஆசமனீயங்கள் கொடுத்துச் ஷட்ரசத்தோடு போஜனம் செய்து வைத்துத் தாம்பூலம் கொடுப்பதற்காக எல்லோரையும் வரிசையாக உட்காரவைத்தார். அப்போது ஞானதேவர் கும்பரை நோக்கிச் சுவாமி நீர் கடம் செய்கிறவராயிற்றே, இதோ கடாளாகிய நாங்கள் உட்கார்ந்திருக்கிறோம், இந்தக் கடங்களில் பக்குவமடைந்தது எது, அடையாதது எது என்று கேட்க, கும்பர்: கடம் செய்கிற தட்டுப்பலகையைக்கொண்டு ஒவ்வொருவரையும் பலமாக ஓர் அடி அடித்துக்கொண்டு என்னிடம் வர, நான் பயந்துச் சுவாமி: நிரபராதியாகிய என்னை அடிக்கவேண்டாம் என்று சொன்னமாத்திரத்தில் கும்பர் என்னைச் சுட்டிக்காட்டிப் பக்குவமாகாத கடம் என்றார். எனக்கு மிக அவமானமாகி நான் தேவரீரிடம் வந்தேன். தேவரீர் என்னை விஷோபாகேஸ சுவாமியிடம் உபதேசம் பெறும்படியாக அனுப்பினீர்கள்; நான் விஷோபாகேஸ சுவாமியிடம் போக அவரால் எனக்குச் சகல மர்மமும் வெளியாகியது என்றார். நாமதேவரைச் சோதிக்க வேண்டுமென்று பகவானுக்கு எண்ணமுண்டாகிச் சமயம் பார்த்துக்

கொண்டிருக்க, ஓர் சாவுகார் கிரகத்தில் பிராமண சமாராதனை நேர்ந்து பிராமணர்கள் எல்லோரும் சம்பிரமமாகப் போஜனம் செய்கையில், பகவான் ஸ்ரீ பாண்டுரங்கன் நாய் ரூபமெடுத்துப் பந்தியில் உட்கார்ந்திருக்கிற பிராமணர்கள் மேல் விழுந்து புரளுகிறதும், இலையில் வாயிடுகிறதும், பிராமணர்கள் மேல் விழுந்து விளையாடுகிறதும், காது அடைபடும்படியாக அவர்கள் காதில் வாய் வைத்து ஒவென்று ஓலமிட்டுக் குலைக்கிறதும், சுயம்பாகச் சாலையில் புகுந்துச் சமையல் பதார்த்தங்களில் வாயிடுகிறதும், பாத்திரங்களைத் தலைகீழ் உருட்டுகிறதும், ஒன்றைத் தூக்கி மற்றொன்றில் மோதுகிறதும், பதார்த்தங்கள் ஒன்றோடொன்று கலக்கும்படியாக சின்னபின்னப் படுத்துகிறதுமாக அலங்கோலம் செய்யப் பிராமணர்கள் கற்களையும், மண் கட்டிகளையும், வாரி அடித்தார்கள். பகவானாகிய நாய் ஓலமிட்டுக்கொண்டு நாமதேவரிடம் வந்துச் சுற்றிச் சுற்றிக் காலைப் பிராண்டினார். நாமதேவர் பிராமணர்களை நோக்கி ஹே விப்பிரச்சிரேஷ்டர்களே உங்களுக்குச் சிறிதேனும் மதியில்லாமற் போய்விட்டதே, பகவான் சர்வாந்தர்யாமி என்று சகல சாஸ்திரங்களும் முறையிடுகிறதே, எண்பத்துநான்கு லக்ஷம் ஜீவராசிகளிலும் அந்தர்யாமியாயிருக்கப்பட்டவராயிற்றே, அப்படியிருக்க, இந்த நாயை அடிக்கலாமா, இந்த நாய் ஜீவராசிகளில் சேர்ந்ததல்லவென்று நினைத்தீர்களோ, நீங்கள் எல்லோரும் மிக பாவத்திற்குள்ளானீர்கள், நாய் காலைச் சுற்றிக்கொண்டு வருகிறதே, இந்த நாயை அடிப்பதற்கு உங்களுக்கு மனதும் வந்ததோ! நாயினுடைய அழகும் தேஜஸ்ஸும் கண்ட உங்களுக்குப் பகவான் அடிக்கவும் புத்தி கொடுத்தாரோ? ஹா பாவிகளே! கர்மாபிமானிகளே! பகவான் என்று சிறிதும் யோசியாமல் போய்விட்டீர்களே, உங்களுக்குச் சமாராதனையல்லவோ பெரிதாகியது என்று கடுகடுத்துச் சொல்ல நாமதேவர் கையில் வைத்திருக்கிற ரொட்டித்துண்டை நாய் பிடுங்கிக்கொண்டு ஓடியது. நாமதேவர் ஒரு பாத்திரத்தில் தீர்த்தம் எடுத்துப்போய், சுவாமி: வெறும் வரட்டு ரொட்டியைச் சாப்பிடாதேயும், தொண்டையில் அடைத்துக்கொள்ளப்போகிறது, தீர்த்தம் சாப்பிடும் என்று அதின் வாயிலிருந்த ரொட்டியைத் தன் கையில் வாங்கிக்கொண்டு துண்டுதுண்டாக ஒடித்துக்கொடுத்து மெள்ளச் சாப்பிடச்செய்துத் தீர்த்தம் சாப்பிடக்கொடுத்தார். அப்போது சகல பிராமணர்களும் ஆச்சரியப்பட்டு நாமதேவருக்குப் பைத்தியம் பிடித்ததோ, நாய்க்கு ரொட்டித் துண்டு துண்டாகச்செய்து ஊட்டுகிற வேடிக்கையை பாருங்கள் என்றார்கள்; சிலர் ஆம், ஆம், சகல ஜீவ

ராசிகளும் ஒன்று தான், எல்லாரும் சமத்துவம் என்றார்கள். அப்போது நாய் ரூபமாகயிருக்கிற பகவான் நாமதேவரை நோக்கி, அப்பா நீ எவ்விதம் அறிந்தாய் என்று கேட்கச், சுவாமி எனக்கு இந்த மர்மம் விஷோபாகேஸ சுவாமிகள் சொல்லிக் காண்பித்திருக்கிறார் என, பகவான் சங்குசக்கிர பீதாம்பரதாரியாய் நாமதேவருக்குத் தரிசனம் கொடுத்தார். சகல பிராமணர்களும் ஆச்சரியப்பட்டு ஆஹா நாய் சாக்ஷாத் ஸ்ரீ பண்டரிநாதன் என்று தெரியாமல் மண்ணையும் கற்களையும் வாரி அடித்தோமே, நாமதேவருக்குப் பகவான் என்று தெரிந்து உபசாரம்பண்ணினர், அவர் அல்லவோ தன்னியர், நாம் எல்லோரும் மானபிமானத்தால் கெட்டுப் போனோம் என்று நாமதேவரைப் புகழ்ந்து வாழ்த்தினர்கள்.

நிற்க, கார்த்திகை மாதம் சுக்கிலபக்ஷம் ஏகாதசியன்று நாமதேவர் சன்னிதியில் கீர்த்தன நர்த்தனம் பண்ணிக்கொண்டிருக்க, பகவான் பக்தர்களை நோக்கி இன்று போஜனத்திற்குக்கிருபை செய்ய வேண்டுமென்று அழைக்க நாமதேவர் பகவானை நோக்கி இன்றைதினம் ஏகாதசியாயிற்றே, இன்று அன்னம் தீண்டலாகாது, தெய்வத்தில் தேவரீரும், செடியில் துளசிச்செடியும், விரதத்தில் ஏகாதசிவிரதமும் சிரேஷ்டமானது, அந்த ஏகாதசிவிரதத்தை அநுஷ்டிப்பதில் அம்பரீஷமகாருஷியும் ருக்மாங்கத ராஜாவை விட வேறு ஒருவருமில்லை என, பகவான் நாமதேவரை இரண்டாவது தடவை பரிக்ஷை பார்க்க எண்ணி, ஏகாதசியன்று ஓர் விருத்தப் பிராமண ரூபந்தரித்து ஜீர்ணவஸ்திரம் கட்டிக்கொண்டு நாமதேவர் கிரகத்தில் வந்து உட்கார்ந்தார். நாமதேவர் அவருக்கு நமஸ்காரம் செய்து என்ன காரியமாய் வந்தீர் என, அப்பா எனக்கு மிகப் பசியாக யிருக்கிறது, கொஞ்சம் அன்னமிருந்துக் கொடுத்தால் பசியாற்றிக் கொள்வேன், அதினல் உனக்கு சுகிர்தமுண்டு என, அவர்:—ஹே பிராமணோத்தமா, இன்று ஏகாதசியாயிற்றே, அன்னம் கையினலும் தீண்டலாகாது, அப்படியிருக்கக் கிரகத்தில் அன்னம் எப்படியிருக்கும், கொஞ்சம் பழவர்க்கங்களிருக்கிறது, அங்கீகரிக்கவேண்டும் என்றார். பிராமணன் அன்னத்தைத் தவிற வேறு ஒன்றிலும் எனக்கு இக்ஷையில்லை; நீ அன்னம் இல்லையென்றால், இந்தக்ஷணம் என் பிராணன் போய் விடும், உனக்குப் பிரம்மஹத்திதோஷம் சம்பவிக்கும் என்றார். அப்போது நாமதேவர், ஹே பிராமணோத்தமரே எப்போது ஒருவனுக்கு புண்ணியத்தில் இக்ஷையில்லையோ அவனுக்கு பாவமில்லை, நானே விஷ்ணுபக்தன், பாவ புண்ணியத்திற்கு ஒட்டாமலிருக்கிற

வன், ஸ்ரீபாண்டுரங்கன் சரணாரவிந்தத்திலே சித்தத்தை லகிக்கச் செய்து ஜீவன் முக்தனுகயிருக்கப்பட்டவன், ஒன்றிலும் மோஹ மில்லாதவனுக்கு ஒரு வஸ்து போனுலென்ன, வந்தாலென்ன, இரண் டும் சமத்துவம் என்றார். அதற்குப் பிராமணன் அப்பா:— என் பசி பொறுக்காது, பிராணன் போகிறது, நீர் ஏதோ வீண் சங்கதி களெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறீர்; என்னங்காணும் இந்த க்ஷணம் நீர் அன்னம் போடாமற்போனுல் என் பிராணன் போய்விடுவது நிச்ச யம் என்றார். அவர் பிராமணனை நோக்கி, ஓய் பிராமணு! நீர் பிராணன் விட்டால் என் கெதியும் உம்மைப்போலவே முடியும் என்று நிச்சயமாய் நினைத்துக்கொள்ளும் என்று சொல்லி பிராமணனுக்குச் சமீபம் போய்ப் பார்க்கச் சுவாசம் நின்று விட்டது. அந்தச் சங்கதி யைக் கேள்விப்பட்ட அவ்வூர் ஜனங்கள் ஒன்றுகூடி ஓய் நாமதேவரே என்ன! ஹரி பக்திபண்ணுகிறேன், மகாவைராக்கியசீலன் என்று பெ யர் வைத்துக்கொண்டுப் பிராமணன் பசி என்று அன்னம் கேட்டால் அவருக்கு அன்னம்போடாமல் கொலைபண்ணிப்போட்டீரே, ரொம்ப நன்றாயிருக்கிறது, ஓய், நீர் ரொம்ப ஞானி என்று பெயர் வைத்துக் கொண்டு பசித்துவந்தப் பிராமணனுக்கு ஒரு கவளமன்னம் கொடுத் துப் பசியாறச் செய்யாமல் கொலை செய்யலாமா என்று பற்பல விதமா கத் தூஷிக்க, அவர் ஒன்றையும் கவனியாமல் பிராமணனைத் தன் தோளில் தூக்கிக்கொண்டுச் சந்திரபாகாநதிக்குப் போய்க் கரையில் காஷ்டம் அடுக்கிப் பிராமணனை வைத்துத் தானும் அதன் மேல் படுத்துக் காஷ்டத்தைத் தானே எடுத்து அடுக்கிக்கொண்டு நெருப்பிட்டுக் கொண்டார். அது சங்கதி கேள்விப்பட்ட நாம தேவர் சம்சாரம் தானும் வந்து ஜதையில் படுத்துக் கொண்டாள். அக்கினி நாலண்டையும் சூழ்ந்து எரிகையில் வேடிக்கைப் பார்க்க வந்த ஜனங்கள் ஆச்சரியப்பட்டு ஆஹா, ஸ்திரி, புருஷர் இருவருக் கும் என்ன திடசித்தம், என்ன பக்தி என்று எல்லாரும் கொண் டாட ஸ்ரீபாண்டுரங்கன் சங்கு சக்கிர பீதாம்பரதாரியாகப் பிரசன்ன மாய் நாமதேவரைக் கட்டி ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு அப்பாஉன் னைப்போல நிஜபக்தன் ஒருவருமில்லை, அம்பரீஷரும், ருக்மாங்கதனும் உனக்கு ஈடல்ல, அம்பரீஷருடைய விரதநேமத்தால் தசாவதாரம் எடுக்க நேரிட்டது; அப்பா நாமதேவா உன்னிமித்தியம் பௌத்த ரூபமாயிருந்த நான் சகுண ரூபமாயிருக்கிறேன் என்று சொல்லி அந் தர்த்தானமானார். சகல ஜனங்களும் ஆச்சரியமடைந்து நாம தேவரைச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து பீமாதீரவாசியாகிய ஸ்ரீ

ருக்மணிகாந்தனைப் பஜித்து ஆனந்தபரவசமானார்கள்.

ஒருநாள் நாமதேவர் தாயார் நாமதேவரை நோக்கி அப்பா நான் மிக விருத்தாப்பிய முடையவளானேன், நீ சதாகாலமும் பகவத் தியானம் செய்துகொண்டு சம்சாரத்தில் சிறிதும் கவலையில்லாமல் காலங்கழித்து வருகிறாய், எனக்குத் தேகத்தில் பலன் குறைந்து விட்டது, உடம்பு தள்ளுகிறது, நடக்கச் சக்தியில்லை, ஓயா இருமல் கண்டு மிக அவஸ்தைப்படுகிறேன், நீ என்னைப் பற்றிச் சிறிதும் கவலை எடுத்துக் கொள்ளுகிறதில்லை, இருமல் நிற்கும்படியாக ஏதாகிலும் பச்சிலை கொணர்ந்து கொடுத்து எனது அவஸ்தையை நீக்கலாகாதாவென்று மிக அநுதாபத்தோடு சொல்லுகையில் நாமதேவர் இரக்கப்பட்டு மூலிகை எடுத்து வருவதற்காக வனத்தை நோக்கி அரிவாள் எடுத்துச்சென்று வட விருக்ஷத்திற்கு மத்தியிலிருக்கிற ஓர் மூலிகையை எடுப்பதற்கு அரிவாள்கொண்டு வெட்டினார். வெட்டினமாத்திரத்தில் மரத்திலிருந்து இரத்தம் ஆறுகப்பெருக ஆரம்பித்தது. அதைக் கண்ட நாமதேவர் மிகப் பயந்து ஆஹா நான் என்ன காரியம் செய்தேன், சிறிதும் புத்தியில்லாமற் போய் விட்டதே, ஐயோ இனி செய்யத்தகுந்தது என்னயிருக்கிறது, மரமும் ஓர் ஜீவராசியில் சேர்ந்ததென்று அறியாமல் போனேனே; மரங்களிலும் பகவான் சாந்நித்தியமாயிருக்கிறார் என்று அறியாமல் அரிவாள்கொண்டு வெட்டி இரத்தம் வரும்படியாகச் செய்தேனே, என்னைப்போல் மகாபாவி, சண்டாளன் பூலோகத்திலுண்டோ, அதுவும் நான் செய்த பூர்வ ஜன்ம பாவமோ, இக ஜன்ம பாவமோ, ஒன்றும் தெரியவில்லையே, ஹே நாதா, பண்டரீநாதா, மரத்திலிருந்து இரத்தம் வருவதை நிறுத்தி என்னைக் காப்பாற்றலாகாதா என்று பகவான் ஸ்ரீ பாண்டுரங்கனைக் குறித்து ஸ்தோத்திரம் செய்ய, என்ன கதறியும் பகவான் வாராமையைக் கண்டு மிகக் கிலேசமடைந்து ஆஹா மரத்திலிருந்து வருகிற இரத்தம் எவ்விதம் நிற்கப்போகிறது, என்ன செய்வது என்று யோசித்துக் கடைசியில் தனது தேகத்திலிருந்து மாமிசம் எடுத்து வெட்டுண்ட பாகத்தில் வைத்து இரத்தத்தை நிறுத்திவிடுகிறதென்று எண்ணங்கொண்டு அரிவாளால் தன் தேகத்தில் ஓர் பாகம் தசையை எடுத்து மரத்தின் வெட்டின பாகத்தில் பொருந்தவைத்துப் பார்க்க இரத்தம் நிற்கவில்லை; நாமதேவர் மிக அநுதாபத்தோடு ஹே தீனபந்து, அனாதரக்ஷகா மரத்திலிருந்து பிரவாகிக்கிற இரத்தம் நிற்கச்செய்து என்னைக் காப்பாற்றலாகாதா, நான் அறியாமல் செய்த குற்றமாச்சுதே, தேவரீர் க்ஷமிக்கலாகாதா என்று

பிரலாபித்துக் கதறுகையில், பகவான் மந்தஹாசத்துடன் நாமதேவருக்குப் பிரசன்னமாகி மரத்தடியில் சென்று வெட்டின பாகத்தை தடவிக்கொடுக்க இரத்தம் நின்று எப்போதும் போல் மரமும் ஒட்டிக்கொண்டது, நாமதேவர் தன்னைத்தான் வெட்டிக்கொண்ட காயமும் ஆறியது.

## பீதரு பிராமணன்.

நிற்க, நாமதேவருடைய பிரபாவமும், கீர்த்தியும் நாடெங்கும் பரவ ஓர் பிராமணோத்தமர், பீடரில் வாசம்செய்யப்பட்டவர், மிக நியமத்தோடு பகவத்பக்தி பண்ணிக்கொண்டு சுகதுக்கம் சமமாகப்பாவித்துத் தான் ஓர் காலத்தில் செய்துகொண்ட பிரார்த்தனையை நாமதேவரைக் கொண்டு நடப்பித்துக்கொள்ள உத்தேசித்துப் பண்டரீபுரம் சென்று நாமதேவசுவாமியை அழைக்க, அவர் பண்டரீபுரம் பண்டரீநாதனை விட்டு வரமாட்டேனென்று பிடிவாதமாகச் சொல்லப் பிராமணன் மிக விசனமடைந்து ஸ்ரீ பண்டரீநாதனைக் குறித்து ஹே நாதா, ஆபத்பாந்தவா, அனாதரக்ஷகா என் மேல் கிருபைகூர்ந்து என் பிரார்த்தனையை நாமதேவசுவாமியைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்ளும்படியான பாக்கியம் அடையும்படியாகக் கிருபைசெய்ய வேண்டுமென்று மிக அநுதாபத்தோடு இருபது நாள் அகோ இராத்திரி அன்ன ஆகாரமில்லாமல் விரக்தியாகத் தியானம்செய்ய, பகவான் பண்டரீநாதன் கிருபைகூர்ந்து பிராமணனை நோக்கி ஹே பிராமண உனது ஸ்தோத்திரம் கேட்டுச் சந்தோஷமடைந்தேன், நீ சுகமாக நாமனை பீடர்பட்டணம் அழைத்துச்சென்று உனது பிரார்த்தனையை முடித்துக்கொண்டுச் சீக்கிரம் அனுப்பிவிடு என்று ஆக்ஞாபித்து அந்தர்த்தானமானார்.

ஸ்ரீ பாண்டுரங்கன் கிருபை தன்மேல் உண்டாகியது என்று பிராமணன் மகிழ்ச்சியடைந்து நாமதேவரையும் மற்றுமுள்ள பிராமணர்களையும் அழைத்துக்கொண்டு பீடர் பட்டணம் நோக்கி மிக ஆடம்பரத்துடன் மேளவாத்தியங்கள் முழங்க பகவத் பஜனை செய்துகொண்டு ஊருக்குள் பிரவேசித்த மாத்திரத்தில் அப்பட்டணம் அரசாண்டு வரும் பாதுஷா நாமதேவருடைய குதூகலமான ஆரவாரத்தைக் கேட்டு இதென்ன சப்தம், திடீரென கேட்கிறது. யாராகிலும் படையெடுத்து வந்தார்களோ என்று உப்பரிகை மேல் ஏறிப்பார்க்கத் திரளான ஜனங்கள் கூட்டமாக வருவது கண்டு மிகச்சினந்து, மந்திரியை அழைத்து ஹே மந்திரி இதென்ன கூட்டம், பார்த்தால் சாமான்னியமாகக் காணப்படவில்லையே, பட்டணம் கொள்ளைகொண்டு போக

வந்த கூட்டம்போல தோன்றுகிறதே யல்லாமல் ஹரிபஜனை செய்கிற கூட்டமல்ல, ஆதலால் நீர் நமது சேனைகளை அனுப்பி வந்திருக்கிறவர்கள் யார், என்ன கூட்டம் என்று விசாரித்துத் தெரியப்படுத்து என, மந்திரி சேனைகளை அனுப்பி விசாரிக்க, நாமதேவரோடு வந்த பக்தஜனங்கள், சாதுக்கள், பிராமணர்கள், பாதுஷா அனுப்பிய சேனைகளைக்கண்டு பயந்து நடுநடுங்கி ஓட்டம் பிடித்தார்கள். நாமதேவர் மட்டும் பயப்படாமல் நின்று வந்த சேனைகளை நோக்கி அப்பா நாங்கள் கபடநாடக சூத்திரதாரியான ஸ்ரீ பாண்டுரங்கவிட்டலருடைய தாஸாநு தாஸர்கள், நாங்கள் யாத்திரைக்காக வந்தவர்களே யல்லாமல் கொள்ளைக்காவது, பட்டணம் கட்டிக்கொள்ளவாவது வந்தவர்களல்ல, எங்களைத் தொந்தரவு செய்யாதீர்கள், நீங்கள் தயவு செய்து வந்த வழியே செல்லுங்கள் என்றார். சேவகர்கள் மந்திரியிடம் வந்து சுவாமி நாங்கள் விசாரித்தவரையில் வந்தவர்கள் ஸ்ரீ பண்டரீநாதருடைய பக்தஜனக்கூட்டமாம், தாம் திருடவாவது, இராஜ்ஜியம் கைக்கொள்ளவாவது வந்தவர்களல்லவென்று சொல்லுகிறார்கள்; அவர்கள் ஸ்ரீபாண்டுரங்கவிட்டல், ஸ்ரீராமா, ஸ்ரீகோவிந்தாவென்று நாமகீர்த்தனமாகிய கோஷம் செய்துகொண்டு வருகிறவர்களாயிருக்கிறார்களே தவிர, எதிரியாகக் காணப்படவில்லை என, மந்திரி பாதுஷாவிடம் சங்கதி அறிவிக்க, அவன் மிகச்சினந்து சுவாமிகளுடைய மகிமையறியாமல் மறுபடி சேவகர்களை அனுப்பி நாமனைப் பிடித்துப் பின்கட்டாகக்கட்டி இழுத்துவாருங்கள் என்று கடுமையாக ஆக்ஞாபித்தான். மந்திரி பாதுஷாவை நோக்கி, ஹே பிரபு, தாம் அவ்விதம் செய்வது நியாயமல்ல, அவர்கள் பரமஹரிபக்தர்கள், யாருடைய மகிமை எவ்விதமிருக்குமோ, அது அறியாமல் நாம் செய்யும் காரியம் சரியல்லவென்று அநேக விதமாகச் சொல்லியும் கேளாமல், முரட்டுத்தனமாகச் சேவகர்களை அனுப்பி நாமதேவரைக் கொண்டுவரச்செய்தான். சேவகர்கள் ஓடோடியும் சென்று நாமதேவரை பின்கட்டாகக் கட்டி நையப்புடைத்து இழுத்துக்கொண்டு வந்து பாதுஷாவிடம் சேர்த்தார்கள். பாதுஷா நாமதேவரை கோபாவேஷத்தோடு பார்த்து ஹே வேஷதாரி: என்ன நெற்றியில் மண் தடவிக்கொண்டிருக்கிறாய், கழுத்தில் என்ன மணி, பார்த்தால் வேஷதாரி போலிருக்கிறது, இதோ பார்த்தாயா, என்ன வென்று நினைக்கிறாய், ஜாக்கிரதை, இறந்துபோன பசுமாடாக்கும், இந்த மாடு பிழைக்கும்படிச் செய்யவேண்டும், இல்லாவிடில் உன்னைச் சிரச்சேதம் செய்துவிடுவேன், ஜாக்கிரதையாக யிருவென்றுக் கடுமையாக ஆக்ஞாபித்துச் சுற்றிலும் சேவகர்களைப் பாரா

வைத்துவிட்டான். அந்த வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் நாமதேவசுவாமி மிகக் கிலேசமடைந்து, ஆஹா! ஹரி, ஹரி நாராயணு இதற்கென்ன செய்வது என்று மிகத் துக்கத்தோடு ஹே அனுத பந்து, பாண்டவசகாயா, இறந்துபோன இந்தப் பசுவை பிழைக்கச் செய்ய வேண்டுமென்று பாதுஷா கடுமையாக ஆக்ஞாபித்து, அவ்வி தம் செய்யாவிடில் சிரசாக்கினை செய்துவிடுவதாகச் சொல்லியிருக்கி ருன்; இச்சமயம் இறந்த பசுவை பிழைக்கச்செய்து என்னைக் காப்பாற் றிக் கிருபைசெய்ய வேண்டுமென்றுத் தமது கையை பசுவின் சிரசில் வைத்து ஹே நாதா கருணை புரியவேண்டும்; இச்சமயம் கைவிட்டால் நான் பிழைப்பது துற்லபம், ஹே பக்தபராதியானி, சீக்கிரம் ஓடி வா ரும் ஹே பாண்டுரங்கா சீக்கிரம் வாரும், இது சமயம், இச்சமயம் கை விடலாகாது என்றுப் பகவானை நோக்கி ஸ்தோத்திரம்செய்ய, முரளி தரன் பிரசன்னமாகி நாமதேவரை மார்போடணைத்துத் தமது திவ்ய அஸ்தத்தால் பசுவைத் தடவிக்கொடுக்க பசு எழுந்தது. உடனே அநேக சர்ப்பங்கள் கிளம்பி ஊர் முழுதும் எங்கு பார்த்தாலும் சர்ப் பமாகி ஜனங்கள் மேல் விழுந்து கடிக்க, அநேகபேர்கள் ஏககாலத்தில் இறந்தார்கள். தப்பிப்பிழைத்த சிலர் பாதுஷாவைக் கோபித்து இவ் வித அனர்த்தம் யாவும் ஹே பாதுஷா உமது அக்கிரமத்தால் நேர்ந்த தென்று கோபங்கொண்டு எல்லோரும் ஒருமிக்கப் பிரேதங்களை அரண்மனை வாயிலில் போட்டு ஹே பாதுஷா உன் இராஜ்ஜியம் பாழாகியது, உனது அக்கிரமம் குலைய, உனது அகங்காரம் சீர் குலைய என்று வாயில் வந்தபடி நிந்தித்து மாரடித்துக்கொண்டு அழுது புலம்பி அலங்கோலமாக கூக்குரலிட்டு ஹே பாதுஷா பகவத்பஜனை யால் உண்டான கோஷம் உனக்குக் கேட்கக் கூடவில்லை, இங்கு அழு குரலாகிற அலங்கோலம் உன் காதுக்கு இனிமையாகயிருக்கிறதோ? நன்றாகக் காது குளிரக்கேள் என்று ஓலமிட்டார்கள். பாதுஷா பிரஜை களின் அலங்கோலக் கூக்குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு மந்திரி இதென்ன அனர்த்தம், பட்டணம் அலங்கோலப் படுகிறதே, ஏககாலத் தில் அரண்மனைக் கெதிரில் பிணக்குவியில் குவிந்த காரணம் என்ன என்று கேட்க, மந்திரி பாதுஷாவை நோக்கி ஹே பிரபு நான் முன் னமே சகலமும் அறிவித்தேனே, யார் மகிமை எவ்விதமிருக்குமோ வென்று சொன்னேன், செவி கொடுக்கயில்லை, நான் செய்வதென்ன யிருக்கிறது என, பாதுஷா, ஹேமந்திரி போனதுபோகட்டும், புத்தி மோசமாகியது, இனி யாகவேண்டிய விஷயம் தெரிந்துச் சொல்லு மென, மந்திரி நாமதேவரை நமஸ்கரித்து ஹே சுவாமி: பாதுஷா

புத்தியில்லாமற் செய்த காரியத்திற்குத் தேவரீர் ஆயாசப்படக் கூடாது, மன்னித்துக் கிருபை செய்யுங்கள், கோபம் வேண்டாம், அருள்புரியவேண்டுமென்றுப் பிரார்த்திக்க, நாமதேவர் கிருபை கூர்ந்து அரண்மனைக்கு எதிரில் கிடக்கிற பிணக்குவியல்களை பிழைக்கும்படி செய்து அநுக்கிரகிக்கச் சகலரும் ஆனந்தக்கடலில் மூழ்கி நாமதேவரை வாழ்த்தினார்கள். பீடர் பட்டணத்துப் பிராமணன் நாமதேவசுவாமியைத் தனது கிரகத்திற்கு அழைத்துச் சென்று பிரார்த்தனையைச் சுவாமிகள் மூலமாக நிறைவேற்றிக்கொண்டு நாமதேவரை ஊருக்குப்போக வழிவிட்டனுப்ப, அவர் மற்றப்பிராமணர்களுடன் பண்டரீபுரம் சேர்ந்தார்.

## கமலாகரன்

நிற்க, பண்டரீபுரத்தில் கமலாகரன் என்று ஒரு பிராமணோத்தமர் இருந்தார். அவர் மிக தெய்வபக்தியுள்ளவர், அவர் தனது மனைவி சுமதியோடு சம்சாரம் நடத்திவருகையில் ஒரு புத்திரன் பிறந்தான். அவர்கள் அந்தக் குழந்தையை மிக லாலனையோடு வளர்த்துத் திருப்தியடைந்தவர்களாகச் சதிபதி களிருவரும் அந்நியோன்யமாகயிருந்துகொண்டு பர்தாவுடைய வாக்குக்கு அணுவும் மீறிநடவாமல் நற்குணமுடையவளாய் அதிதிகளுக்கு அன்னமிடுகிறதும், இகபரத்திற்கு ஏதுவான காரியத்தையேச் செய்துகொண்டு வரும் நாளில், ஒருநாள் சாதுக்கள் சிலர் பண்டரீபுரம் யாத்திரைக்காரர்கள் கமலாகருடைய வீடு சேர்ந்துப் பிராமணனுடைய அந்தரங்கச் சுத்தியையும், அவர் சிரத்தையோடு அழைப்பதையும் கண்டுச் சந்தோஷமடையப் பிராமணன் அவர்களுக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம்செய்து சுவாமிகளே தேவரீர் என் கிரகம் வர நான் மிக தனிகனானேன், தேவரீருடைய பாததூளி என் கிரகத்தில் பட்டமாத்திரத்தில் நான் பாவன மடைந்தேன், தனிகனானேன், தேவரீர் எல்லோரும் என் கிரகத்தில் போஜனம்செய்து போகவேண்டுமென்றார். சாதுக்கள் கமலாகரனை நோக்கி ஹே பிராமணோத்தமா நீர் அந்தரங்கவிசுவாசத்தோடு போஜனத்திற்கு அழைத்ததே போதுமானது, வெகு திருப்தியாச்சுது என்றார்கள். அதற்குப் பிராமணன் அவ்விதம் சொல்லலாகாது, புண்ணிய புருஷர்களாகிய தேவரீருடைய குட்சியில் ஒரு கவளம் அன்னமிட்டால் இகபர சாதனமுண்டு, பகவத்கிருபா திருஷ்டிக்குப் பாத்திரனாவேன் என, சாதுக்கள் அவருடைய மனதுக்கு இசைந்து எல்லோரும் ஒரு மிக்க ஸ்நானம் செய்யப் புறப்பட்டார்கள். பிராமணன் சமுசாரத்தை அழைத்து

சாதுக்கள் போஜனத்திற்கு வருகிற சங்கதி அறிவித்து, இருவரும் கிரகத்தில் சென்று பதார்த்தங்களிருக்கிறதா வென்றுச் சோதித்துப் பார்க்க, யாதொன்றுமில்லாமல் வெறும் பானைகளாக யிருக்கக் கண்டு மிகக் கிலேசமடைந்து ஆஹா நான் வீட்டில் சென்றுச் சாமான்கள் பாராமலும், முன் பின் யோசனை செய்யாமலும் சாதுக்களை போஜனத்திற்கு அழைத்தேனே, இப்போது எவ்விதம் போஜனம் செய்து வைப்பதென்று விசனப்படப், பிராமணனுடைய பாரியை நாதனை நோக்கிச் சுவாமித் தேவரீர் ஒன்றும் விசனப்படவேண்டாம், சகல சாமான்களும் நான் சேகரித்து விடுகிறேன் என்று அயல் அண்டைக் கிரகத்தில் சென்று வேண்டிய பதார்த்தங்கள் கொண்டு வந்துத் தனது பர்தாவுக்குக் காண்பித்து, இதோ சகல சாமான்களும் சேகரித்துவிட்டேன்; கவலைப்பட வேண்டாம், ஸ்நானம் செய்து பூஜை முதலானது முடித்துக்கொண்டு இலைபோட எத்தனியுங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டுக் குழந்தையை நோக்கி அப்பா சகல சாமான்களும் சேகரித்தேன், விரகு மாத்திரம் வேண்டியது, சமீப மிருக்கிற காடு சென்று விரகு ஒடித்து வா என்று அனுப்பினள். அவ்விதமாகவே குழந்தை காடு சென்று விரகு ஒடிக்க, ஒரு கொடிய சர்ப்பம் குழந்தையைத் தீண்டக் குழந்தையானது அம்மா வென்று அலறி பிராணன் விட்டது. குழந்தை அம்மாவென்று கூப்பிட்டது காதுகொடுத்துக் கேட்டு ஆஹா குழந்தைக்கு என்ன ஆபத்து நேரிட்டதோ வென்று போய்ப் பார்க்கக் குழந்தை இறந்துபோயிருக்கிறதையும், சமீபம் கொடிய சர்ப்பம் போயிருக்கிறதையும் கண்டு, அழுது புலம்பித் தனது அழுகுரல் சாதுக்கள் கேட்டால் அவர்கள் போஜனத்திற்கு இடையூறு உண்டாகுமென்று நினைத்துக் குழந்தையை வஸ்திரத்தில் மூடி ஒருவருக்கும் தெரியாது சந்தடிசெய்யாமல் கிரகத்தில் ஓர் மூலையில் வைத்துச் சிறிதும் கிலேசப்படாமல் சட்ரஸத்துடன் சமையல் பக்குவமாகச்செய்து சாதுக்களுக்கு இலைபோட்டுப் பரிமாற, சாதுக்கள் ஆபோசனம் வாங்கிக்கொள்ளுகிற சமயத்தில் பகவானுக்கு அர்ப்பணம்செய்து, கிருஷ்ணார்ப்பணம் என்று சொல்லிப் பகவானைத் தியானித்தார்கள். அக்காலத்தில் கிருஷ்ணார்ப்பணம் என்று பகவானைத் தியானித்த மாத்திரத்தில் பிரசன்னமாவதுண்டு; அதுபோல பகவான் வராமைக்குக் காரணம் நாமதேவர் ஞானதிருஷ்டியால் அறிந்து கமலாகாருடைய சம்சாரத்தினிடம் சென்று அம்மா இன்று காலை நாங்கள் உங்கள் வீட்டுக்கு வருங்காலத்தில் ஓர் குழந்தை விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டோம், அந்தக் குழந்தை எங்கு

காணேமே, பார்த்து அழைத்து வாருங்கள், குழந்தையை விட்டுச் சாப்பிடுகிறது தர்மமல்ல, குழந்தை தெய்வத்துக்குச் சமானமாச் சுதே, குழந்தையும், தெய்வமும் கொண்டாடுமிடத்தில் என்று சொல்லுவார்கள், காலை பார்த்தக் குழந்தை காணேமே, அதினுல்தான் பகவான் சாந்நித்தியமாகவில்லை, சீக்கிரம் குழந்தையை அழைத்து வாருமம்மா என்றூர், அதைக்கேட்ட அம்மாள், சுவாமி குழந்தைச் சாப்பிட்டுத் தொட்டிலில் தூங்குகிறுன், இப்போது எழுப்பலாகாது, சாதுக்களோ காத்துக்கொண்டிருக்கிறூர்கள் அவர்கள் ஆபோசனம் வாங்கிக்கொள்ள என்ன தடை என்றுள். அதற்கு நாமதேவர் அம்மாவை நோக்கிக் குழந்தை எத்தனை தடவை சாப்பிட்டால்தான் என்ன? எங்களோடும் சாப்பிடட்டுமே, அழைத்து வாருங்கள் என்றூர். அம்மாள் குழந்தையை அழைத்து வர மார்க்கமில்லாமல் கையைப் பிசைய, நாமதேவர் பரிதாபத்தோடு ஹே கிருபாநிதே, ஹே பாண்டுரங்கா, தேவரீர் சர்ப்பத்தின் ரூபங்கொண்டுக் குழந்தையைத் தீண்டிச் சத்சாதுக்களை சங்கடத்திற்குள் படுத்தலாமோ, இது உமக்கு நியாயமோ, பக்தர்களைச் சங்கடத்திற்குள்ளாக்கி வேடிக்கைப் பார்ப்பதுவும் ஓர் லீலையோ! உமது பக்தர்களுக்குச் சங்கடத்தையுண்டு பண்ணி அதினுல் அவர்கள் விசனமடையப் பார்த்திருப்பதுமான கோலம் உமக்கு திருவிளையாட்டோ; ஹே ஆதிமத்தியாந்தரகிதா, உமது கிருபைக்குப் பாத்திரனுகக் காத்துக்கொண்டிருக்கிற எங்களுக்கு உம்மையல்லாமல் வேறு தெய்வமில்லை; சீக்கிரம் கிருபை செய்து இரக்ஷிக்க வேண்டுமென்றுப் பிரார்த்திக்க, பகவான் ஸ்ரீபாண்டுரங்கன் பிரசன்னமானுர். நாமதேவர் பகவானுக்குச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்ய, பகவான் நாமதேவரைக் கட்டி ஆலிங்கனம்செய்து குழந்தையை மூடிக் கிடத்தியிருக்கிற இடத்தைப் பார்த்த மாத்திரத்தில் குழந்தை எழுந்து அம்மா எனக்கு மிக தாகமாயிருக்கிறது, தீர்த்தம் கொடுவென்றது. உடனே குழந்தையை அழைத்துக் கொண்டு சாதுக்களிடம் செல்ல, பகவான் அந்தர்த்தானமானுர். பகவான் அந்தர்த்தானமானதும் ஜய, ஜய ஹே ராமா, கோவிந்தா, கிருஷ்ணு வென்று நாமகீர்த்தனம் செய்து, கிருஷ்ணுர்ப்பணமென்று சொல்லிச் சாதுக்களுக்கு ஆபோசனங்கொடுக்க, எல்லோரும் திருப்தியாகப் போஜனம் செய்துத் தாம்பூலம் பெற்று ஹரிகீர்த்தனம் செய்து கொண்டு புறப்பட்டார்கள்.

### தாதாசாவுகார்.

குணுபாயி நாமதேவரை நோக்கி அப்பா நான் தினகாலம் உனக்கு

எவ்வித புத்தி சொன்னாலுங்கேட்கிறதில்லை. எந்நேரமும் ஸ்ரீபாண்டு ரங்கனைத் தியானித்துக் கொண்டுச் சிறிதும் சம்சாரத்தில் கவலையில்லாமற் காலங்கழித்துக்கொண்டிருக்கிறாய், உனது சம்சாரம் வர வர விர்த்தியாகிக்கொண்டு வருகிறது, குழந்தை ஒன்று பிறந்திருக்கிறது, நீ எவ்விதத் தொழிலும் செய்கிறதில்லை, நீ குழந்தையை எவ்விதம் சம்ரக்ஷணை செய்யப்போகிறாய் என்றாள். அதைக் கேட்ட நாமதேவர் தாயை நோக்கி அம்மா நான் செய்வதென்னயிருக்கிறது, சகலமும் ஸ்ரீபாண்டுரங்கனுக்கு ஒப்பித்துவிட்டேன், என் குடும்பம் காப்பாற்றும் பொறுப்பு அவரைச் சேர்ந்தது, எனது தேகமே ஸ்ரீபண்டரீநாதருக்கு ஒப்பித்துவிட்டேன், நானே அவருக்குக் குழந்தையாகயிருக்க, குடும்பசம்ரக்ஷணை நான் எவ்விதம் செய்யப்போகிறேன், சம்ரக்ஷணை செய்வதற்கு நான் யார், நானே ஸ்ரீபாண்டுரங்கனுடைய சம்ரக்ஷணையிலிருக்கிறேனே என்றார். குணபாயி, நாமதேவரை நோக்கி என்னடா நான் ஒன்று சொன்னால் நீ ஒன்று சொல்லுகிறாயே, உனது வேதாந்தம், வைராக்கியம் இவைகளெல்லாம் குடும்ப சம்சாரமார்க்கத்திற்கு எற்குமோடா. என் உனக்குத் தெரிகிறதில்லை; நான் சொல்லும் வார்த்தைகளுக்கு பதில் ஏதோ சொல்லிவிடுகிறாய், என்னைப்பரிகாசம் செய்கிறாயா என்ன? உனக்குக் கொஞ்சங்கூட நியாயமல்ல, அப்பா இனியாகிலும் சம்சாரத்தில் சிறிது கவலை வைத்துச் சம்ரக்ஷணை செய்வதற்கு மார்க்கம் தேடு, சம்சாரக்கவலையில்லாத உன்னை உலகம் நிந்திக்கும், அப்பா நான் சொல்வது புத்தியோடுகேள், அலக்ஷியம் செய்யாதே, மாதுருவாக்கிய பரிபாலனம் செய்யவேண்டும், இல்லாவிடில் பழிக்குப் பாத்திரனாவாய் என்றாள். நாமதேவர் அம்மா நான் எவ்விதம் குடும்பசம்ரக்ஷணை செய்யப்போகிறேன், என்னிடம் திரவியமிருக்கிறதா? ஏதாகிலும் உத்தியோகமிருக்கிறதா? வியாபாரத் தொழில் நடந்து வருகிறதா? ஒன்றுமில்லையே, சம்சாரம் எவ்விதம் நடத்துகிறது என, குணபாயி அப்பா நான் சிறிது திரவியம் கடன்வாங்கிக் கொடுக்கிறேன், அதை வைத்துக்கொண்டுத் தொழில் நடத்தி, வருமானத்தில் உனது குடும்ப காலக்ஷேபம் செய்துவா என்றாள். அவ்விதமே செய்கிறேனென்று நாமதேவர் ஒப்புக்கொள்ள, பண்டரியில் மகா கிருபணசிரோமணியாய், வயிற்றுக்குச் சரியான சாப்பாடில்லாமல் கதான்னம் புசித்து பணம் சேகரித்து வட்டிக்குக் கொடுத்து விர்த்தியாக்கி மிக தனிகனுயிருக்கிற தாதா பந்துலுவிடம் சென்று சுவாமி எனது குமாரன் நாமன் ஏதோ வியாபாரம் செய்து குடும்ப காலக்ஷேபம் செய்ய

உத்தேசங்கொண்டிருக்கிறுன், எனது பலவந்தத்தின்மேல் வியாபாரம் செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறுன், அவனுடைய எண்ணம் மாறுவதற்குமுன் எவ்விதமாகிலும் திரவியம் சேகரித்துக் கொடுக்க வேண்டுமாதலால் தேவரீர் என்மேல் கிருபைகூர்ந்து ஆயிரம் வராகன் கடன் கொடுக்க வேண்டுமென்று பிரார்த்தித்தாள். தாதாபந்துலு குணுபாயியுடைய வேண்டுகோளுக்கிணங்கி பணம் தருகிறேன் என்று ஒப்புக்கொண்டு மறுநாள் வராகன் ஆயிரம் குணுபாயி கையில் கொடுத்துச் சரியாகயிருக்கிறதா எண்ணிக்கொள் என்ருர். குணுபாயி மிகச் சந்தோஷ மடைந்து நான் கேட்டு வாய்மூடுவதற்குள் சீட்டு எழுதி வாங்கிக்கொள்ளாமலே ஆயிரம் வராகன் எண்ணிவிட்டாரே இது என்ன ஆச்சரியம், இதுவும் ஸ்ரீ பாண்டுரங்கனுடைய மகிமை என்று கொண்டாடி, தாதாபந்துலுவுக்கு வராகன் ஆயிரம் ஆறுமாத கெடுவுக்குள் வட்டியுள்பட கொடுத்துவிடுவதாகச் சீட்டு எழுதிக் கொடுத்து ஆயிரம்வராகன் பெற்று நாமதேவரிடம் கொடுத்து அப்பா இதோ வராகன் ஆயிரமிருக்கிறது. தகுந்தபடி புத்தியோடு லாபம் கிடைக்கும்படி மிகத் தந்திரமாக வியாபாரம் செய்து கடன்காரனுக்கு அப்போதைக்கப்போது கொடுத்து நீயும் ஜீவித்துக்கொண்டுவா என்று கொடுத்தாள். நாமதேவர் வராகன் பெற்று மிகச் சந்தோஷ மடைந்து அம்மா உனதிஷ்டப்படி வியாபாரத்தில் சிறிதும் நஷ்டமில்லாமற் நடத்திவருகிறேன்; அவ்விதம் செய்யாமற்போனல் நான் உனது குழந்தையாகமாட்டேன் என்று சொல்லி, வியாபாரம் செய்ய உத்தேசித்து, எந்த வியாபாரம் செய்தால் நஷ்டமுண்டாகாமலிருக்குமென்று ஆலோசித்துப் பார்க்க, ஒன்றும் புலப்படாமல் ஆஹா எந்தத் தொழில் நடத்தினுலும் பாவத்திற்கு ஏதுவாகயிருக்கிறதே, இதற்கென்ன செய்யலாம் என்று யோசித்துப் பிராமணர்களுக்கு விநியோகம் செய்வதாகிய வியாபாரமே நல்ல வியாபாரம், அதுவே சிரேஷ்டமான வியாபாரம், ஆனல் உத்தேசித்த இந்த வியாபாரம் தாயாருக்குத் தெரிந்தால் சம்மதிக்கமாட்டாள்; தெரியாமல் நடத்தவேண்டுமென்று நினைத்து தாயாரிடம் சென்று அம்மா நான் இவ்விடமிருந்து வியாபாரம் நடத்தினல் நஷ்டமுண்டாகும் போலிருக்கிறது, ஆகையால் தூரதேசம் சென்று வியாபாரம் செய்தால் சரியான லாபம் கிடைக்கும், சந்தேகமில்லை, என்ன சொல்லுகிருய் என்றுகேட்க, அவ்விதமே செய் என்று குணுபாயி ஆக்ஞாபித்தாள். நாமதேவர் ராக்ஷசபுவனம் என்கிற ஊருக்குச் சென்று அவ்விடமிருக்கப்பட்ட விப்பிரர்களை நோக்கிச் சுவாமிகளே நான் பிராமணர்களுக்குச்

சமாராதனை செய்ய உத்தேசித்திருக்கிறேன், உங்களுக்குத் தெரிந்த வரையில் பிராமணர்களுக்குத் தெரியப்படுத்தி அழைத்துவாருங்கள் என்று சொல்லிச் சமாராதனைக்கு வேண்டிய சாமான்களும் சேகரித்தார். மறுநாள் முதல் நாலு நாள் வரையில் வந்தப் பிராமணர்களுக்கு ஷட்ரஸத்தோடு போஜனமிட்டுச் சந்தனபுஷ்பங்களால் அலங்கரித்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வராகன் தக்ஷிணைகொடுத்து நாலு நாள் இராப்பகல் சம்பிரமமாகச் சமாராதனை நடத்த, பிராமணர்கள் சாப்பிட்டுத் திருப்தியடைந்து அவரவர்கள் ஊருக்குச் சென்று அங்கங்கே நாமதேவசுவாமியுடையச் சமாராதனைச் சம்பிரமத்தைப் பற்றி பிரஸ்தாபிக்க, அது விஷயம் பண்டரீபுரத்தில் தாதாபந்துலு காதுக்கெட்டியது. உடனே பந்துலு சிந்தாகிராந்தனாகி ஆஹா நாமதேவனுடைய வியாபாரம் வெகு நன்றாயிருக்கிறதே, வந்துதே நான் கொடுத்த தொகைக்கு மோசம், அவனுடைய யோக்கியதை எனக்குத் தெரிந்திருந்தும் புத்தி மோசம்போனேனே, இனி எவ்விதம் பணம் வரப்போகிறது, ஐயோ வட்டிக்கு ஆசைப்பட்டு வட்டி போனாலும் போகட்டும், பணத்துக்கே மோசம்வரும்போலிருக்கிறதே, யாரிடம் சொல்லிக்கொள்வது, வெளியில் சொன்னால் வெட்கம், வெளியில் சொன்னால் இருந்திருந்து நாமதேவனுடைய யோக்கிதை உமக்குத் தெரிந்திருந்தும் நாமதேவருக்கா பணம் கொடுத்தீர், அவர் சம்சாரத்தில்ஒட்டாமல் சதா ஸ்ரீபண்டரீநாதனை பஜித்துக்கொண்டிருக்கிறார் என்று சொல்லி என்னையே நிந்தித்துப் பரிகாசம் செய்வார்கள், இதற்கென்னசெய்யலாமென்று யோசித்துத் தான் ராக்ஷசபுவலனம் சென்று நாமதேவரை நேரில் கண்டு பணம் கேட்கிறதென்றுத் தீர்மானித்துப் புறப்பட்டு ராக்ஷசபுவனம் சேர்ந்து நாமதேவரைக்கண்டு அப்பா நாமா எனக்கு நீ கொடுக்கவேண்டிய ஆயிரம் வராகன் கொடுவென்றார். அதற்கு நாமதேவர் தாதாபந்துலுவை நோக்கிச் சுவாமி தேவரீர் பணம் கொடுத்து இரண்டுமாதமாகவில்லையே, பத்திரத்தில் ஆறு மாத கெடு கண்டிருக்கிறதே, நாலுமாதம் பாக்கியிருக்கிறதே, நாலு மாதத்திற்குள் பைசா பாக்கியில்லாமற் கொடுத்து உமது கணக்குத் தீர்த்துவிடுகிறேன் என்றார். தாதாபந்துலு சம்மதியாமல் அப்பா உனது தாயார் நீ ஏதோ வியாபாரம் செய்வதாகவும் அதினால் வரும் லாபத்தை குடும்பச் சிலவு செய்து ஜீவித்து எனக்கும் சிறுகச்சிறுக பணம் கொடுத்துவிடுவதாகச் சொன்னாள், மேலும் ஜீவனத்திற்கு வேறு யாதும் மார்க்கமில்லை என்பதாகவும் சொன்னதின்மேல் நான் கொடுத்தேன்; நீ வியாபாரம் செய்வதாக எனக்குத் தோன்ற

ஸ்ரீ பாண்டுரங்காய நம :

98

ஸ்ரீ வைகுண்டமாகிய ஸ்ரீ பண்டரீ க்ஷேத்திர மகிமையைச் சேர்ந்த 180பகவத் பக்தர்களின் திவ்ய சரித்திரங்கள் மகாராஷ்டிரத்திலிருப்பதைத் தமிழ் படுத்தி உயர்ந்த வெண்மையான கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு 1912-ம௵ ஜூலைமீ ஆரம்பித்து, மாதம் ஒரு சஞ்சிகை வெளிப்படுத்தப்படுவதை பிரமுர்கள் அடியில் கண்ட சந்தா செலுத்தி சஞ்சிகையை (வாசிக்க, வாலிபர்களுக்கு வசனநடைப் பழக்கம், பெண்களுக்கு நல்லொழுக்கம், முதிர்ந்தோர்களுக்கு ஞானமும் உண்டாக்கத்தக்கதானதால்) பெற்று ஆனந்தித்து இகபரசாதனமடையக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

12 சந்தாதார்கள் சேர்த்து வருஷ சந்தா ரூபா 2/4 வீதம் வசூல் செய்து விலாசத்துடன் அனுப்புகிறவர்களுக்கு 1 வருஷ சஞ்சிகை முழுதும் அனுப்பப்படும். சந்தாதார்களுக்கு சந்தாத் துகை வசூல் செய்து அனுப்புகிறவர்கள் உத்திரவாதி. சந்தா துகைச் சேர்த்து அனுப்புகிறவர்கள் தங்கள் விலாசத்துடன் அடியில் கண்டவருக்கு அனுப்பவும்.

## சஞ்சிகையாவது.

பேஜ் 8 — பாரம் 1
பாரம் 4 — சஞ்சிகை 1
அதாவது 32 பேஜ் கொண்டது ஓர் சஞ்சிகை.

**V. SRINIVASA ROW,**
*Publisher.*

சென்னப்பட்டணம் திருவல்லிக்கேணி சிங்கராசாரி தெரு,
45-வது நெம்பர் வீடு, ஸ்ரீநிவாசராவ்.

---

## சந்தா விகிதம்.

---

| | |
|---|---|
| வருஷ சந்தா ... ... ... | 2—4—0 |
| 6-மாதம் ... ... ... | 1—2—0 |
| 3-மாதம் ... ... ... | 0—9—0 |
| புறதேசம் ... ... ... | 3—0—0 |

N. B.—V. P. யுக்தப்படி அனுப்பப்படும்.